பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி 12 | புதன்கிழமை | (29.10.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 314

துரித தபால்.பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்,பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

## புலிகள் முன்வைக்கும் திட்டவரைபை அரசு ஆராயாமல் ஏற்க முடியாது!

### பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசு முன்வைத்த யோசனைகள் எவ்வாறு விடுதலைப் புலிகளால் ஆராயப்பட்டதோ அதே போன்று விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்டு அரசிடம் கையளிக்கப்படவுள்ள இடைக்கால சபைத் திட்ட வரைபும் அரசாங்கத்தினால் ஆராயப்பட வேண்டியது அவசியமாகும்.இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகள் புனர்வாழ்வு அலுவலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச உறவுகளுக்கான இலங்கை அமைப்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரட்மன் வீரக்கோன் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

விடுதலைப் புலிகளும் அரசும் தனித்தனியே தயாரித்துள்ள திட்டவரைபை ஆராய்வதன் மூலமே அவற்றில் இருக்கக் கூடிய முரண்பாடுகளைக் களைந்து ஓர் இணக்கப்பாட்டை எட்டமுடியும்.

விடுதலைப் புலிகள் இடைக்கால சபைக்கான தமது தரப்பு யோசனைகளை முன்வைப்பது முக்கிய திருப்புமுனை யாகும். எனினும்அவர்கள் முன்வைக்கும் திட்டவரைபை இறுதித் தீர்வாக கருதிவிட முடியாது. விடுதலைப் புலிகளும் மாற்றங்களுக்குத்

(10ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் தனித்தரப்பை பிரிட்டன் அரசு ஏற்றுள்ளது

### அங்கு சென்ற அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(லண்டன்)

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்ள வேண்டுமென்ற முஸ்லிம்களின் நிலைப்பாட்டை பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், பிரபுக்கள் சபை உறுப்பினர்களுக்கும் விளக்கிக் கூறியிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் மக்கள் தனித் தரப்பாகக் கலந்து கொண்டு தமது பங்களிப்பை வழங்க வேண்டுமென்ற நிலைப்பாட்டை பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களும், பிரபுக்கள் சபை உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர் எனக் கூறினார். இதேவேளை அமைச்சர் ஹக்கீம் தலைமையில் பிரிட்டன் சென்றுள்ள முஸ்லிம் பிரதிநிதிகள் குழு பிரிட்டிஷ் வெளியுறவு மற்றும் உள்துறை அமைச்சின் அதிகாரிகளை நேற்று முன்தினம் சந்தித்து இருந்தது.

இச் சந்திப்பு மிகவும் ஆரோக்கிமானதாகவும், பயனுள்ளதாகவும், அமைந்ததாகத் தெரிவித்த அமைச்சர்

(10ம் பக்கம் பார்க்க)

# திட்டவரைபை கையளித்ததும் முஸ்லிம்களுடன் பேசுவோம்!

### சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு


(கிளிநொச்சி)

இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைபை இலங்கை அரசிடம் சமர்ப்பித்த பின், முஸ்லிம் தரப்பினரோடு பல விடயங்களைக் கதைக்கவுள்ளோம்.

இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாகவும், எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ள அரசியல் விடயங்கள் சம்பந்தமாகவும் அவர்களிடம் மிகவும் விரிவான முறையில் ஆராயவேண்டியிருப்பதால் அவர்களை மிக விரைவாக சந்திக்கவுள்ளோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)



## தமிழ் மாணவி ஒருவர் கொழும்பில் கடத்தப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரியைச் (சைவ மங்கையர் கழகம்) சேர்ந்த 17 வயது மாணவி ஒருவர் இனம் தெரியாதோரால் கடந்த சனிக்கிழமை மாலை கடத்தப்பட்டுள்ளார்.இவரை விடுவிக்க கடத்தல்காரர்கள் 15 இலட்சம் ரூபாவை கப்பமாக தரவேண்டுமென கேட்டுள்ளனர். வெள்ளவத்தையில் உள்ள தனியார் கல்வி நிறுவன வகுப்புக்குச் சென்ற இம் மாணவி வெகுநேரமாகியும் வீடுதிரும்பவில்லை மாலை 6 மணியளவில் இம் மாணவியின் வீட்டுக்கு தொலைபேசி அழைப்பை விடுத்த கடத்தல்காரர்கள் இம் மாணவியை விடுவிக்க 15 இலட்சம ரூபாவை தரவேண்டுமென தாயாரிடம் கோரியுள்ளனர்.இவர்கள் தமிழிலேயே பேசியுள்ளனர்.

கடத்தல்காரர்கள் ஒரு தமிழ் அமைப்பை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். பொதுமக்களிடம் இருந்து தகவல்களை திரட்டி வருகின்ற போதிலும் இன்னும் எவரும் கைது செய்யப்படவில்லை

(ந.6)

## புலிகளின் திட்டவரைபுக்கு தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு

### நேற்றைய சந்திப்பில் தொண்டமான் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான குழுவினர் நேற்று முற்பகல் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல்12.40 மணி வரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்பேச்சுவார்த்தையின் போது நாட்டின் நிலவும் தற்போதைய நிலைமைகள் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விபரங்கள் என்பன குறித்து ஆராயப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சு வார்த்தையை அடுத்து அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 30 வருடங்களாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வந்துள்ள விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக் கால நிர்வாக சபை யோசனைக்கு தாம் ஆதரவு வழங்

(10ம் பக்கம் பார்க்க)



## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இலுப்பையடிச் சந்திக்கும், திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் பலாலி வீதியில் கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி சார்பான கோவையும் மற்றும் சில ஆவணங்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் க.ஜெயபாலன் 80/5, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (7737)


# வியட்னா-இலங்கை வர்த்தக உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கும்-வியட்னாவுக்கும் இடையே வர்த்தக முதலீட்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

அடுததவருட முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள வியட்னா ஜனாதிபதி இவ் ஒப்பந்தததில் கைச்சாத்திடவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் டிரோன பெர்னாண்டோ அண்மையில் மேற கொண்ட வியட்னா விஜயத்தின் போது இவ் ஒப்பந்தம் குறித்து அந் நாட்டு ஜனாதிபதியுடன் கலந்துரையாடிதை அடுத்தே இரு நாடுகளும் இதில கைச்சாத்திடவுள்ளன.

வெளிநாட்டு அமைச்சரின் இவ் விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகக்குழுவொன்றை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(த-61)

## ரமழான் சிந்தனை

அல்லாஹுதஆலா கூறுகின்றான்

'மு∴மின்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) கடமையாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நீங்கள் பயபக்தியுடையவர்களாக ஆகலாம். (அல்குர்ஆன்:2:183)

புனித மிகு றமழானை எங்களுக்கு நிழலிடச் செய்த வல்ல இறைவனுக்கே புகழ்யாவும். (அல்ஹம்துலில்லாஹ்) புனித மிகு ரமழானைப் பற்றி வல்ல அல்ஹாஜ் தன் திருமறையில் குறிப்பிடும் போது கூறுகின்றான். உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது எவ்வாறு இந் நோன்பு கடமையாக்கப்பட்டதோ-அதேபோன்றுதான் உங்களுக்கும் இந் நோன்பும் கடமையாக்கப்பட்டுள்ளது. அதனை நீங்கள் நோற்பதன் மூலம் பயபக்தியாளர்களாக தாக்வா உடையவர்களாக, நாம் ஆகலாம் என்ற உண்மையையும் அதே வசனத்தில் வல்ல இறைவன் கூறுகின்றான். எனவே எவர் இம் மாதத்தில் கஷ்டப்பட்டு வணக்கங்களை நிறைவேற்றுவதன் மூலம் உயர் பதவிகளுக்கும் ஒப்புடைய அருளுக்கும் அருகதையுள்ளவராக ஆனாரோ, அவருக்கே! சுபசோபனம்.எவர் இம் மாதத்தையடைந்து நோன்பு நோற்காமல் அல்லது நோன்பு நோற்றாலும் அதைப் பாவங்களை விட்டு தூய்மைப்படுத்தாமலும், இரவுகளில் வணங்காமல் அல்லது வணங்கினாலும் அதை உண்மையான பயபக்தியுடன் வணங்காமல் இருந்துவிட்டவருக்கோ துக்கம்தான். நபிபெருமானார் (ஸல்) சொன்னார்கள்.

தகவல்:

மக்கள் பணிமனை.

# இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து நாட்டைக் குட்டிச் சுவராக்கியது ஸ்ரீ.சு.க.

## விளையாட்டுத்துறை அமைச்சர் பாய்ச்சல்

(கொழும்பு)

பயங்கரவாதத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள் மக்கள் வடுதலை முன்னணியினரே. இதனை அவர்கள் மறைக்கின்றார்கள். ஆனால் மக்கள் மறக்கமாட்டார்கள்.

இவ்வாறு இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, குருநாகல் மாவட்டத்தில் கல்முவ நகரில் அண்மையில் நடைபெற்ற இளைஞர் நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தனி நாடு வழங்க இணங்கியுள்ளது. இதனால் நாடு இரண்டாகப் பிளவுபடப் போகிறது என்றெல்லாம் கூச்சலிட்டு வரும் எதிர்க்கட்சிகள்,தமது செயறபாடுகளால் நாட்டில் தோன்றும் பிரச்சினைகளை மறைத்துவிடுகன்றன.

இடது சாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து நாட்டைக் குட்டிச் சுவாராக்கியவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதியில் இருந்து சமுர்த்தி அலுவலர்கள் வரை ஊழல் புரிந்துள்ளனர்.

இவற்றை எல்லாம் மக்கள் மறந்துவிடமாட்டார்கள். மக்களின் வாக்குகளில் அரசமைத்து இறுதியில் மக்களுக்கே துரோகம் செய்யும் அரசியல்வாதிகளான இவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசை கவிழ்த்துவிட எண்ணுகின்றார்கள்.

ஆனால்,இவர்களின் எந்த எண்ணம் ஒரு போதும் நிறைவேறாது.20 வருடமாக ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை பலிகொண்ட யுத்ததை நிறுத்தி, வளமிழந்த நாட்டை புத்துயிர் கொடுத்தவர் பிரதமர் ரணில் என்பதையும் மக்கள் மறக்கமாட்டார்கள்.

இதேவேளை, நாட்டுப்பற்று எனப் போலி வேடம் போடும் சிஹல உறுமயக்கட்சியினர் அண்மையில் புலிகளின் முகாமைப் பார்வையிட கிண்ணியாவிற்கு சென்றனர். அவர்களின் இந்தச் செயற்பாடு புலிகளை சினங்கொள்ள வைத்தாலும் பொறுமையுடன் இருந்து விட்டார்கள். காரணம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும் ஏற்படுத்தியுள்ள சமாதானச் சூழ்நிலையே ஆகும்.

எமது பிரதமர் நாட்டில் சமாதானச் சூழ்நிலையினை ஏற்படுத்திய மையினாலேயே இந்த இனவாத சக்திகள் இன்று அச்சமின்றி நடமாடுகின்றன. இதனை அவர்கள் முதலில் உணர வேண்டும் எனறார்.(உ-10)

### கல்வி உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ் சமூகசெயற்பாட்டு மையத்தின் கீழ் யு.என்.எச்.சி.ஆர். நிதியுதவியுடன இயங்கும் இருபாலை வசந்தநிலா முன்பள்ளிக்கு கல்வி உபகரணங்கள் விளையாட்டு உபகரணங்கள, சமையுல் உபகரணங்கள், போஷாக்குணவு போன்ற பல்வேறு உதவிகளும் வழங்கும் நிகழ்வு இன்று மு.ப. 10 மணிக்கு வசந்த நிலா முன்பள்ளி முன்றலில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலா கேதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளதுடன் யாழ் சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் கு.வி. நிஷாந்தன், இருபாலை கிழக்கு கிராம உத்தியோகத்தர் மற்றும் இருபாலை கிழக்கைச் சேர்ந்த சமூக சேவை அமைப்புக்களின் அங்கத்தவர்கள பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ-10)

# சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு)

சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் புறூம்மர்சூர் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை, நீர்கொழும்பு, களுத்துறை, கொழும்பு போன்ற சிறைச்சாலைகளில் பணிபுரியும் அதிகாரிகளுக்கே இவ்வச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன.

சிறைச்சாலைகளில் கையடக்கத தொலைபேசி பாவனைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து அதனைக் கட்டுப்படுத்தவும் கைதிகளிடம் இருநது அவற்றை மீட்கவும், விசேட பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டு அதற்கிணங்க மேற்படி சிறைகளில் உள்ள கைதிகளிடம் இருந்த 50 மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை பொலிஸார் மீட்டனர்.

இதனையடுத்தே, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக தெரியவருகிறது.

நேற்று முன்தினம் இரவும் கொழும்புச் சிறைச்சாலைக்குள் சட்டவரோதமாக கொண்டுசெல்லப்படவிருந்த 5 கையடக்கத் தொலைபேசிகளை அதிகாரிகள் மீட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், தடுப்புக்காவலில வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளை வழங்க உதவினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 4 சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே.

(தி-61)


உங்கள் வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்




கண்காணிப்புக்குழுத் தலைவரை பதவி விலக்கத் துடிக்கிறார் ஜனாதிபதி

மீனவர்கள் என்றாலே படையினருக்கு அலர்ஜி

இலங்கையைப் பாதுகாக்க இந்தியாவுடன் ஒப்பந்தம் - அசத்துகிறார் ரணில

ஆலடி மாநாடு

வியாசரின் பதில்கள்

பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00/-

சங்குநாதம்

# இஸ்ரேலுடனான பதற்றநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்

## சிரியாவிற்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் வேண்டுகோள்

(வாஷிங்டன்)

இஸ்ரேலுடனான பதற்ற நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்குமாறு அமைச்சர் கொலின் பவல் சிரியாவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கப் போவதாக சிரிய நாட்டு அதிகாரி ஒருவர் எச்சரிக்கை விடுத்ததையடுத்தே இந்த வேண்டுகோள் வெளியாகியுள்ளது.

1973 ஆம் ஆண்டு நடந்த மத்திய கிழக்கு யுத்தத்தின் பின்னர் முதல் தடவையாக சிரியத் தலைநகர் டமஸ்கஸ் பகுதியில் அமைந்துள்ள நிலையொன்றை இஸ்ரேலிய விமானங்கள் தாக்கியிருந்தன இதனால் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான கசப்புணர்வு வலுவடைந்தது.

இந்நிலையில் சிரிய அதிகாரியின் கருத்து அதனை மேலும் அதிகரித்துள்ளது.

**அரபாத்தைக் கொல்லும் திட்டம் இல்லை**

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தை கொலைசெய்வதற்கான திட்டம் எதுவும் இல்லையென இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் பகிரங்கமாகவும் திட்டவட்டமாகவும் கூறியுள்ளார்.

அமைதி வழிக்கு தடங்கலை ஏற்படுத்தும் அரபாத்தை உடன் பதவியிலிருந்து நீக்கி தனிமைப் படுத்த வேண்டும் என்று முன்னர் கூறிவந்த இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் அரபாத்தைக் கொலைசெய்வதற்கான திட்டம் எதுவும் தம்மிடம் இல்லையென தற்போது கூறியுள்ளார்.

**லெபனான்–இஸ்ரேல் எல்லைகளில் வன்முறை**

லெபனானுடனான இஸ்ரேலின் வட எல்லையில் வன்முறைகள் அதிகரித்துவருகின்றது.

இஸ்ரேலிய இராணுவத்தினருக்கும் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பினருக்குமிடையே இப்பகுதியில் தொடர்ச்சியாக துப்பாக்கிச் சமர் இடம்பெற்றுவருகின்றது. இதனால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.(பி-2)



காவலில் உள்ள முன்னாள் பிலிப்பைன்ஸ் அதிபர் யோசப் எஸ்ட்ராடோ மணிலாவில் நோய்வாய்ப்பட்டிருக்கும் தனது 98 வயது தாயாரைப் பார்த்து அரவணைக்கும் காட்சி. நாட்டைப் பொருளாதாரச் சீரழிவுக்கு உட்படுத்தியமைக்காக நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள இவர், குடும்ப உறுப்பினர் ஒருவரை சந்திக்க அனுமதிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

### கருவிலேயே அழிக்கப்படுவதால்

## பெண் குழந்தைகளின் விகிதம் குறைகின்றது

(புதுடில்லி)

பெண் குழந்தைகளை கருவிலேயே அழித்து விடுவதால் இந்தியாவில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது என்று புள்ளிவிபர அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை மக்கள் கணக்கெடுப்பு ஆணையம் மற்றும் ஐ.நா. மக்கள் தொகை நிதியம் கூட்டாக இந்தப் புள்ளிவிபர அறிக்கையைத் தயாரித்துள்ளன.

இதன்படி 6 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளின் விகிதாசாரம் குறைந்து வருகின்றதாகவும், இதற்கு கருவிலேயே குழந்தைகளை அழித்து விடுவதுதான் காரணம் என்றும் ஐ.நா. மக்கள் தொகை நிதியப் பிரதிநிதி கூறியுள்ளார். (பி)

## ஜப்பானின் தேர்தல் பிரசாரம் ஆரம்பம்

(டோக்கியோ)

ஜப்பானில் பொதுத் தேர்தலுக்கான பிரசாரம் ஆரம்பமாகியுள்ளது.

பிரதமர் ஜூனிஜ்ரோ கொய்சுமி மக்கள் மத்தியில் உள்ள ஆதரவை தமது கட்சியின் வெற்றிக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வாரா என்பதை சோதிக்கும் பலப்பரீட்சைகளமாக இந்தத் தேர்தல் அமைந்துள்ளது.

தமது நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பப் போவதாக உறுதியளித்த பிரதமர் ஜூனிஜ்ரோ ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகள் கடந்துள்ளன.

அவரது பொருளாதார மீள் கட்டமைப்புத் திட்டங்களை மக்கள் ஆதரிக்கின்றார்கள் என்பதைச் சோதிப்பதாகவும் இந்தத் தேர்தல் அமையவுள்ளது. (பி-2)

## பாகிஸ்தானில் சிறுவர் உரிமை மீறல்கள் அதிகரிப்பதாக குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சிறைகளில் சுமார் 4ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்களென சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில், சிறுவர்கள் உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதாக அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க பாகிஸ்தான் அரசு எந்த நடவடிக்கையையும் எடுப்பதில்லையென குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (பி-2)

## இந்திய துருப்பினரின் தாக்குதலுக்கு 4 பாகிஸ்தானியர் பலி

(ஸ்ரீநகர்)

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் இந்தியத் துருப்புக்கள் நடத்திய பதில் தாக்குதலுக்கு 4 பாகிஸ்தான் துருப்புக்கள் பலியாகியுள்ளனர்.

ஜம்மு- காஷ்மீரின் ரயுரி மாவட்டத்தின் எல்லைக் கோட்டுப் பகுதியிலுள்ள இராணுவ முகாம்களையும், இராணுவத்தினரையும் குறிவைத்து பாகிஸ்தான் துருப்புக்கள் எறிகுண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதற்குப் பதிலடியாக இந்தியத் துருப்பினர் நடத்திய தாக்குதலிலேயே 4 பாகிஸ்தானியர்களும் கொல்லப்பட்டுள்ளனர். இச்சம்வத்தையடுத்து அங்கு பலத்த துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றதாக செய்திகள் கூறுகின்றன. (பி-2)

உலக தரிசனம்

# மதுபானக் கடைகளை அரசே ஏற்று நடத்தும்

## தமிழகத்தில் அவசர சட்டம்

(சென்னை)

மதுக்கடைகளை தமிழக அரசே ஏற்று நடத்த முடிவு செய்துள்ளதாக அவசர சட்டம் ஒன்றை பிறப்பித்துள்ளது. ஆனால் இதனை எதிர்த்து மதுக்கடை உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

தமிழக அரசு நேற்று முன்தினம் பிறப்பித்த அவசர சட்டத்தில் மது வகைகளை சில்லறை விலையில் விற்றுவரும் விற்பனையாளர்கள் ஒழுங்கீனமாகச் செயற்பட்டு, அரசுக்கு இழப்பை ஏற்படுத்தியதால் 2001-2002 இல் குலுக்கல் முறை கொண்டுவரப்பட்டது. அதன்பிறகும் தவறான வணிகக் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டு தவறான நடவடிக்கைகள் தொடர்ந்தன என்று கூறியுள்ளது.

எனவே 2003-2004 இல் முறைகேடுகளைத் தடுக்க மதுக்கடைகளுக்கான விண்ணப்பதாரர்களை தகுதி அடிப்படையில் தேர்வு செய்வது என்று ஒரு புதிய முறையை கொண்டுவந்தது. அதற்கான தேர்வுக் குழுக்களில் ஓய்வுபெற்ற நீதிபதிகள் இடம்பெற்றனர். இதில் ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு உரிமம் மட்டும்தான் வழங்கப்படவேண்டும் என்று அரசு விதித்திருந்தது. இந்த புதிய முறையில் பல கடைகளுக்கு யாரும் விண்ணப்பம் செய்யவில்லை. எனவே இந்தியத் தயாரிப்பு அயல் நாட்டு மதுபான வகைகளின தனியார் சில்லறை விற்பனைக்கு முடிவு கட்டி விற்பனையை அரசே ஏற்று நடத்தும் என்றும் அவசர சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த விற்பனை தமிழக அரசு நிறுவனமான டாஸ்மார்க் கிடம் ஒப்படைக்கப்படும் என்றும் இதற்கான ஆட்கள் தேர்வு இன்னும் ஒருவாரத்தில் எடுக்கப்படும் என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த முடிவை கைவிடக் கோரியுள்ள மதுக்கடை உரிமையாள்கள் தமிழக அரசின் நடவடிக்கையை எதிர்த்து நீதிமன்றம் சென்றுள்னர். (பி)

# பக்தாத் குண்டுத் தாக்குதல்களுக்கு சதாம் மீது குற்றம் சாட்ட முடியாது

## அமெரிக்க இராணுவ ஜெனரல் கூறுகிறார்

(வாஷங்டன்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் கடந்த இரு தினங்களாக அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்கு சதாம்ஹுசைனே பொறுப்பெனக் கூறுவதற்கு போதிய ஆதாரங்கள் எதுவும் இல்லையென அமெரிக்க இராணுவ ஜெனரல் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் தீவிரவாதிகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுவதாகவும் அவர்கள் எந்த நேரமும் தாக்குதல் நடத்தத் தயார் நிலையில இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பக்தாத்தில் இடம்பெற்றுவரும் இவ்வாறான தாக்குதல்களுக்கு அஞ்சி சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள் தமது சேவைகளை இடைநிறுத்திக் கொள்ளக் கூடாது என்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

ஈராக் மக்களுக்கு தொடர்ந்து சேவையாற்ற சர்வதேச அமைப்புக்கள் முன்வரவேண்டுமென அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் பக்தாத்திலுள்ள செஞ்சிலுவை அதிகாரிகளை குறிவைத்து தற்கொலைப் போராளி ஒருவர் நடத்திய தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் வேறு நான்கு இடங்களில் அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனா. இத்தாக்குதல்களை அடுத்தே கொலின் பவல் இவ்வாறு கூறியுள்ளார். (பி-2)

## புதுவை ஆளுநர் கே.ஆர்.மல்கானி காலமானார்

(புதுச்சேரி)

புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கே.ஆர்.மல்கானி நேற்று முன்தினம் இரவு காலமானார். மாரடைப்பு நோயினால் காலமான மல்கானிக்கு வயது 80 ஆகும்.

இவருக்கு துக்கம் அனுஷடிக்கும் வகையில் புதிச்சேரியில் ஒருவார காலத்திற்கு கல்வி நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் என்பன மூடப்பட்டுள்ளா தாக தெரிவிக்கப்படுகின்றது (பி-2)



காட்டுத்தீயினால் அழிந்து போயுள்ள கலிபோர்னியாவின் சானபேர்னாடினோ நகரிலுள்ள தனது பாட்டனாரின எஞ்சியுள்ள வீட்டுச் சாம்பலில் பெறுமதியான பொருட்கள் மிஞ்சி இருக்கின்றனவா எனத் தேடுகிறார் மார்ட் டிபிராட்டட்சர் என்பவர். அருகில் அவரது புதல்வர் மேசன் (8 வயது) காணப்படுகின்றார்

# ஜம்முவில் ரயிலுக்கு குண்டுவைத்த பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

(ஜம்மு)

ஜம்மு அருகே எக்ஸ்பிரஸ் ரயிலை வெடிகுண்டால் தாக்கி விட்டுத்தப்பிய பயங்கரவாதிகள் இரண்டு பேர் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு ஜம்முவில் இருந்து புறப்பட்டு புதுடில்லி நோக்கி சென்றுகொண்டிருந்த ஷாலிமர் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயங்கரவாதிகள் வைத்த வெடிகுண்டு வெடித்ததில் அந்த ரயிலின் எஞ்ஜினும் 5 பெட்டிகளும் தடம்புரண்டன. அதிஷடவசமாக உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. ஆனாலும் அப்பகுதியில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ரயிலில் வெடிகுண்டு வைத்த 3 பயங்கரவாதிகளும் இராணுவ உடையில் ஜம்முவிலிருந்து 35 கிலோமீற்றர் தொலைவில் கேக்வால என்னும் இடத்தில் ஜம்மு காஷ்மீர் நெடுஞ்சாலையில் இண்டிகா கார் ஒன்றை நிறுத்தினர். அக்காரிலிருந்த காயமடைந்த 4 பேரையும் தள்ளி விட்டு அந்தக் காரில் ஏறிச் சென்று கொண்டிருந்தனர். கார் அக்னூர் அருகேயுள்ள சோதனைச்சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்ட போது பயங்கரவாதிகள் திடீரென சுட்டதில் ஒரு இராணுவ வீரர் பலியானார். 2 பேர் காயமடைந்தனர்.

அப்போது காரிலிருந்து தப்பிய 3 பயங்கரவாதிகளும் அக்னூர் வனப் பகுதிக்குள் நுழைந்து மறைந்து கொண்டனர். அவர்களை இராணுவத்தினர் சுற்றிவளைத்தனர். இருதரபபிற்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை பல மணிநேரம் நடைபெற்றது. இராணுவ வீரர்கள் சுட்டதில் இறந்துபோன 2பயங்கரவாதிகளின் உடல்கள் முதலில் மீட்கப்பட்டன. பின்னர் மூன்றாவது பயங்கரவாதியும் இராணுவ வீரர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். (பி)

# செய்தித் துளிகள்

## பொதுக்கிணறுகள் புனரமைப்பு

(பன்னாலை)

பன்னாலைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இரு பொதுக் கிணறுகளைப் புனரமைக்கும் பணிகளில் தற்போது மூவிமெண்டோ நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

(உ-32)

## உதைபந்தாட்டக் கழகங்களைப் பதிவு செய்க

(கந்தரோடை)

வலிகாமம் லீக்கில் அங்கம் வகிக்கும் உதைபந்தாட்டக் கழகங்கள் தங்களது பதிவுகளை எதிர் வரும் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு லீக்கின் செயலாளர் மு.நடராஜா கேட்டுள்ளார்.

இதேவேளை, பதிவு செய்யாத கழகங்கள் எந்தப் போட்டிகளிலும் பங்கேற்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ-103)

## நுளம்பு வலை

(பன்னாலை)

பன்னாலைப் பகுதியில் உள்ள சிறு பிள்ளைகளைக் கொண்ட தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு லயன்ஸ் கழகம் அண்மையில் நுளம்பு வலைகளை வழங்கியுள்ளது.

(உ-32)

## முதியோர் கௌரவிப்பு

(ஏழாலை)

ஏழாலை மத்தி ஞான வைரவர் ஆலய பரிபாலன சபை ஏற்பாட்டில் முதியோர் கௌரவிப்பும, வறிய மக்களுக்கான உதவு பொருள் வழங்கலும் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்,

இப் பகுதியில் உள்ள விழிப் புலனிழந்த சகலருக்கும் மாதாந்தம் உதவிப்பணம் வழங்கவுள்ளதாகவும் அவர்களுக்கான பல்வேறுபட்ட உதவிகளை வழங்க 20 லட்சம் ரூபாவை மேற்படி பரிபாலன சபைக்கு வழங்கவிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

(உ-90)

## நாரந்தனைப் பாடசாலையில் நூலகவாரம்

(யாழ்ப்பாணம்)

யா/நாரந்தனை றோ.க.மகா வித்தியாலயத்தில் நேற்று முன தினம் நூலக வாரம் அனுட்டிக்கப் பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் த.சத்திய தாசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மாணவர்கள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

அத்துடன் அன்றைய தினம் நூலகக் கண்காட்சியும் இடம்பெற்றது. இதில், நூலக வாரத்தில் மாணவர்களால் சேகரிக்கப்பட்ட நூல்களும் அதிபர், ஆசிரியர்கள் அன்பளிப்புச்செய்த நூல்களும் இடம்பெற்றன.

(உ)

## மகிழ்வான கற்றல்

(தொல்புரம்)

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தால் சங்கானைக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட சில பாடசாலைகளில் கல்விகற்கும் பின்தங்கிய மாணவர்களுக்கு மகிழ்வான கற்றல் வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

தொல்புரம் அ.மி.பாடசாலை, வட்டு.கார்த்திகேசு வித்தியாலயம் மற்றும் மூளாய் அ.மி.பாடசாலை ஆகியவற்றில் கல்விகற்கும் பின் தங்கிய மாணவர்களுக்கு மேற்படி வகுப்புகள் வாரத்தில் 3 நாட்கள் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

(உ-70)

## சத்துணவு

(மருதங்கேணி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் கற்பிணித் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப் பட்டுவருகின்றது.

(உ-35)

## கூடைப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஹட்டன் நஷனல் வங்கியினால் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்க அனுசரணையுடன் நடத்தப்பட்டு வரும பாடசாலை மற்றும் கழகங்களின் ஆண்,பெண் அணிகளுககிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட டியில் இன்று காலை 6.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி '' பி'' அணியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் யா/ சென்ஜோன்ஸ கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன.

மேற்படி போட்டியில் வெற்றி யீட்டும் அணியுடன் மாலை 5.00 மணிக்கு சென்ஜோன்ஸ் கல்லூரி அணி மோத வுள்ளது.

(உ)

## நூல் வெளியீடு

(பருத்தித்துறை)

வே.அம்பிகைபாகன் எழுதிய ''சக்தியின் வடிவங்கள்'' நூல் வெளியீட்டு விழா நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் யாழ்.பல் கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் எதிர் வரும் மாதம் 2ஆம் திகதி நடை பெறவுள்ளது.

ஆசியுரையை துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும் வரவேற்புரையை பீ.சங்கீதாவும் நிகழ்த்தவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பீ.கோபால கிருஷ்ண ஐயா அறிமுக உரையையும், வரலாற்றுத்துறை விரிவுரையாளர் கலாநிதி பீ.புஸ்பரட்ணம் வெளியீட்டுரையையும் நுணகலைத் துறைத்தலைவர் கலாநிதி ஏ.கிருஸ்ண வேணி மதிப்பீட்டுரையையும் இலக்கியக் கலாநிதி கே.சொக்கலிங்கம் பாராட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

(பி-52)

## பாதீனியம் அழிப்பில் பொதுமக்கள்

(தொல்புரம்)

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சில பகுதிகளில் தற்போது உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் பாதீனியம் களை அழிப்பு நடவடிக்கைகள் துரித கதியில் அவ்வப்பகுதி பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி பிரிவுக்குட்பட்ட சங்கானை மண்டிகைக் குளத்திற்கு முன்பாகவுள்ள வெளியண்டிய பகுதி, சங்கானை தேவாலய வீதிப்பகுதியில் உள்ள நீதவான் முகாம் சுற்றாடல், வட்டுக்கோட்டை சந்திப் பகுதி ஆகியவற்றிலேயே தற்போது களை அழிப்பு நடவடிக்கைகள் மேற கொள்ளப்பட்டு வருகின்றன.

இச் செயற்பாடுகளில் ஈடுபடும் பொதுமக்களுக்கு உலக உணவுத் திட்ட நிறுவனம் உலர் உணவுப் பொருட்களை வழங்கி வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

(உ-70)

## நிறைவுவிழா மலர்

(மருதங்கேணி)

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 30 வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்தால் 30வது ஆண்டு நிறைவு மலர் வெளியிடப்பட்டது.

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கடந்த ஆண்டுகால வரலாற்றில் அதன் வளர்ச்சி பணிகள், ஏற்பட்ட பின்னடைவுகள், பனை தென்னை உற்பத்தி வீழ்ச்சிக்குரிய காரணங்கள் அதனை கட்டியெழுப்புவதற்கு மேற் கொள்ளப்படவேண்டிய பணிகள் போன்ற பல்வேறு விடயங்களைத் தாங்கி இந்நூல் வெளிவந்துள்ளது.

(பி-35)

# கொரியன் நாட்டுத் தேசிய மருத்துவ சேவை-ஒரு பார்வை

''கொம்ஸ்ரா'' என்ற பதம் கொரியா நாடு தனது தேசிய மருத்துவ சேவையை பிறநாடுகளுக்கும் வழங்கி அங்குள்ள மக்களின் சுகாதார மற்றும் மருத்துவ சேவையை பூர்த்திசெய்யும் மனிதாபிமான பணியை குறிக்கும்.

கொம்ஸ்ரா தனது மருத்துவ சேவையை 2003ஆம் ஆண்டில் 10 நாடுகளுக்கு விஸ்தரிக்கத் திட்டமிட்டு செயற்படுகின்றது. அதில் இலங்கைக்கான சேவையை நவம்பர் மாதத்தில் திட்டமிடப்பட்டு செயற்படுத்துகின்றது. இதன் காரணமாகவே கைதடி சித்த போதனா வைத்திய சாலையில் நவம்பர் மாதம் 4ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை இரு இலவச மருத்துவ சேவை முகாமை நடாத்த முன்வந்துள்ளது.

2003ஆம் ஆண்டு கொரியன் நாட்டிலும் தனது வைத்திய சேவையை வலுப்படுத்துவதுடன் அதற்கான வசதிகளையும் ஏற்படுத்தி உள்ளது. மருத்துவ மாணவர்களுக்கு அறிவுரைகளையும் உதவிகளையும் வழங்கி எதேச்சையான மருத்துவ சேவையில் ஈடுபடுத்துவதும் அவர்களின் நோக்கமாகும். அது மட்டுமல்லாது உள்ளூர் சமூகங்களின் ஒத்துழைப்புடன் தேசிய மருத்துவ சேவையை ஊக்குவித்து மக்களின் சுகாதார தேவைகளை பூர்த்திசெய்வதும் அவர்களது முக்கிய கடமை என உணர்கின்றனர்.

கொம்ஸ்ராவின் முதலாவது வெளிநாட்டு மருத்துவ சேவை நேபாளத்தில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் திகதி நடாத்தப்பட்டது.

உலகளவில் வசதியற்ற பொருளாதார ஸ்திரமின்மையால் பாதிப்படைந்திருக்கும் மக்களுக்கு கொரியன் நாட்டு தேசிய மருத்துவ சேவையையும் சமாதானத்தையும் இந்நாட்டு கலாசாரங்களையும் வலுப்படுத்தும் வசதிகளையும் வழங்குவதே இந்தச் சேவையின் நோக்கமாகும்.

550 கொரியன் தேசிய மருத்துவர்களைக் கொண்ட இந்த மருத்துவ சேவை அமைப்பில் தற்போது 650 அங்கத்தவர்கள் உள்ளனர்.

உலகில் மிகவும் வசதியற்ற மக்களுக்கு மனிதாபிமான தேசிய மருத்துவ சேவையை வழங்குதல், கொரியன் நாட்டு தேசிய மருத்துவர்களின் சேவை எங்கு தேவைப்படுகின்றதோ அங்கு அவர்களை அனுப்பி தேவைகளை பூர்த்தி செய்தல், தேசிய மருத்துவ சேவையை உலக மயப்படுத்தல் மூலம் உலக நாடுகளிடையே மருத்துவர்களை பரிமாற்றிக் கொள்ளுதல், வெளிநாட்டு மருத்துவ சேவைகளை செயற்படுத்துவதன் மூலம் மீளவும் மருத்துவக் கற்பித்தலை ஊக்குவித்தல், வைத்திய நிறுவனங்களை செயற்படுத்துதல், உள்ளூர் வைத்திய சேவையை பலப்படுத்துதல் ஆகியன கொம்ஸ்ராவின் எதிர்காலத் திட்டங்களாகும்.

உலகின் பல பாகங்களிலும் வசதிகளற்ற மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் வைத்திய சேவையை வழங்குவதற்காக குறுகிய கால அளவிற்கு ஒரு வைத்திய சேவைக்குழுவை அனுப்புதல்.

கொரியன் தேசிய மருத்துவ மனை ஒன்றை ஸ்தாபித்தல்.

கொரியன் தேசிய மருத்துவ மனை சம்பந்தமான மருத்துவக் கல்வியைப் போதித்தல் ஆகிய 3 படி நிலைகளில் இதன் செயற்பாடுகள் அமைகின்றன.

கொரியன் நாட்டு அரசாங்கம் தனது தேசிய மருத்துவ சேவையை முன்னேற்றமடையச் செய்வது மட்டுமல்லாது மற்ற நாடுகளுக்கும் தங்கள் தேசிய மருத்துவ சேவையை வழங்குவது பாராட்டக்கூடிய ஒரு விடயமாகும். இற்றைவரை 22 நாடுகளுக்கு 43தடவைகள் விஜயம் செய்து தங்கள் மருத்துவ சேவையை 1 இலட்சத்து 5ஆயிரம் மக்களுக்கு வழங்கியுள்ளனர்.

இற்றைவரை வெளிநாடுகளில் 5 கொரியன் மருத்துவ மனைகள் இஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் 5நாடுகளுக்கு 6 கொரியன் தேசிய மருத்துவர்களை நீண்டகால திட்ட அடிப்படையில் கடமையாற்ற அனுப்பப் பட்டுள்ளனர்.

உலக மயப்படுத்தல் மூலம் கொரியன் தேசிய மருத்துவ சேவை 5 நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 3 நாடுகளில் கொரியன் தேசிய மருத்துவுக் கல்வியும் போதிக்கப் படுகின்றது.

உலுகிஸ்தான் நாட்டில் அடுத்த 2 வருடங்களுக்கு ''கொம்ஸ்ரா'' மருத்துவ சேவைக்காக அந்நாட்டு மக்கள் தங்களைப் பதிவு செய்துள்ளனர்.

தற்போது உலக நாடுகள் தேசிய மருத்துவ சேவைபற்றிய விழிப்புணர்வுடன் செயற்படுகின்றன. எந்த வைத்திய சேவையானாலும அதன் உயரிய நோக்கம் மக்களை நோயில் இருந்து விடுவிப்பதும், நோய் வராமல் பாதுகாப்பதும், ஆரோக்கியத்தைத் தொடர்ந்து பேணுவதுமாகும். ஆகவே தேசிய மருத்துவம் உரிய இடத்தைப் பெற வேண்டுமானால் அந்த மருத்துவத்தினால் பொதுமக்கள் பயன்பெறவேண்டும். தேசிய மருத்துவம் ஒரு குடும்பத்தினுடைய, சமூகத்தினுடைய வாழ்க்கைமுறையில், உணவுப் பழக்கவழக்கத்தில், நோயைத் தீர்ப்பதில் சிறந்த பங்கினை வழங்கவேண்டும்.

கொரியன் நாட்டு தேசிய மருத்துவ சேவையை எங்கள் மக்களும் நவம்பர் 4, 5, 6, 7ஆம் திகதிகளில் கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் காலை 9.00மணிமுதல் மாலை 4.00மணி வரை பெறும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்துவதனால் எந்த நோய்களுக்கும் பக்க விளைவில்லாத சிகிச்சையைப் பெற முடியும் என்ற அனுபவத்தை எட்டக்கூடியதாக இருப பதுடன் மீண்டும் இந்த சேவையைப் பெறக்கூடிய சந்தர்ப்பத்தையும் தோற்றுவிக்கும் என நம்புகின்றேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக எமது மக்களுக்குரிய கலாசாரம் பண்பாட்டுடன் இணைந்த சித்த மருத்துவத்தையும் வளர்க்க வேண்டும் என்றதாகம் இனியாவது சித்தமருத்துவ கலாநிதிகள் மத்தியில் தோன்ற வேண்டும். அதற்குரிய அனுசரணையும் சகல மட்டங்களிலிருந்தும் அளிக்கப்பட வேண்டும் என்பது மக்களுடைய ஒரு எதிர்பார்ப்பாக அமைந துள்ளது.

*பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி*
**சார்க் நாடுகளின் மருத்துவ செயற்பாட்டுக் குழுவின் அங்கத்தவர்**

தேசிய மருத்துவம் இயற்கையோடு இணைந்த மருத்துவம் மட்டுமல்ல உடல் உள ஆரோக்கியத்தைப் பேணுவதிலும் சிறந்தது என்பது சகலரும் அறிந்திருக்க வேண்டிய தொன்றாகும்.

கொரியன் நாட்டு அரசாங்கம் தனது சேவையை உலகமயப்படுத்தி சாதனைபுரியும். இந்த யுகத்தில் நாமும் ஏதாவது செய்யவேண்டும் என சிந்திப்பது காலம் கருதிய ஒரு செயற்பாடு என்பது எனது பணி வான கருத்தாகும். ஆரோக்கிய சமூதாயம் ஒன்றை உருவாக்க எமது இணைந்த செயற்பாடு அவசியமாகின்றது.□

# கடந்த பன்னிரண்டு வருடங்களில் 11,000 பேர் காணாமல் போயுள்ளனர்

## சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

1990ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 11 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இவர்கள் அனைவரும் காணாமல் போனதற்கு அப் பிரதேசங்களில் இடம்பெற்றுவந்த யுத்தமே காரணம்.

கடந்த 12ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போனோர் தொடர்பாக 20ஆயிரம் முறைப்பாடுகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 9ஆயிரம் பேர் தொடர்பான விபரங்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் அவர்களது உறவினர்களுக்கு அறிவித்துள்ளது.

இவர்களில் உயிருடன் உள்ளவர்களும், யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களும் அடங்குவா.

எனினும 11ஆயிரம் பேர் தொடர்பான விபரங்களை அறிய முடியாதுள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன்,

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னரும், அதற்கு முன்னரும் காணாமல் போனவர்கள் தொடர்பான விபரங்கள் குறித்து சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஆராயவென தமிழீழ விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் தீர்மானித்திருந்தன.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்களால் அது சாத்தியப்படவில்லை.

எனினும், காணாமல் போனவர்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டும் பணிகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர் என அச் செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி-61)



**பருத்கிக்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை இந்து மாணவ மன்றத்தின் பரிசளிப்பு விழாவில் இடம்பெற்ற ''தக்கன யாகம்'' நாட்டிய நாடகத்தில் ஒரு காட்சி.**

படம்:பரு.நிருபர்

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல. : 40 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

★ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

★ கீழே உள்ள இடைவெளிகளில் சரியான சொல்லைக் கண்டு நிரப்புக.

01. ........................................................ நாளை வீட்டுக்கு வருவேன்
02. ........................................................ இன்று பாடசாலைக்கு வரமாட்டான்
03. ........................................................ இன்று கோயிலுக்கு வருவாயா?
04. ........................................................ எல்லாரும் ஓடி விளையாடினர்.
05. ........................................................ வரிசையாகச் செல்லுங்கள்.

★ கீழே உள்ள வாக்கியங்களில் கோடிட்ட எழுத்தில் உள்ள சொற்கள் சார்பாக சரியான விடையைத் தெரிவுசெய்க.

06. வரன் பாடசாலைக்குச் சென்றான்
 1) ஆண்பால் 2) பெண்பால் 3) ஒன்றன்பால்
07. வயல் வெளியில் மாடு புல் மேய்ந்தது
 1) ஆண்பால் 2) பெண்பால் 3) ஒன்றன்பால்
08. கலை விழாவில் கஸ்தூரி பாட்டுப்பாடினாள்
 1) ஆண்பால் 2) பெண்பால் 3) பலர்பால்
09. துரையப்பா விளையாட்டு அரங்கில் விளையாட்டுவீரர்கள் அணியணியாகச் சென்றார்கள்
 1) ஒருமை 2) பன்மை 3) அ்.றிணை
10. மேசையின் மீது புத்தகம விரிந்தபடி இருந்தது
 1) ஒருமை 2) பன்மை 3) உயர்திணை

★ கீழ்வரும் சொற்களை ஒழுங்குபண்ணிக் கருத்துநிறைந்த வாக்கியம் அமைக்க.

11. காயம்பட்ட/வைத்தியர்கள்/கவனமாகப்/நோயாளியைப்/பரிசோதித்தனர்
 ........................................................
12. கோயிலுமில்லை/சிறந்ததொரு/தாயிற்
 ........................................................

★ கீழே சில பாடல்களின் முதல்வரி தரப்படுகின்றது. இவை என்ன பாடல் வகை என அருகே உள்ள இடைவெளியில் எழுதுக.

13. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
 வாழிய வாழியவே ........................
14. சிறீலங்கா தாயே - நம் சிறிலங்கா
 நமோ நமோ நமோ நமோ தாயே ........................
15. சிறுநண்டு மணல்மீது படம் ஒன்று கீறும்
 சிலவேளை அதைவந்து கடல்கொண்டு போகும் ........................

★ பொதுவாக நாம் பயன்படுத்தும் சில முக்கிய குறியீடுகள் வருமாறு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முற்றுப்புள்ளி | ( . ) | காற்புள்ளி | ( , ) | அரைப் புள்ளி | ( ; ) | முக்காற் புள்ளி | ( : ) |
| வினாக் குறி | ( ? ) | வியப்புக்குறி | ( ! ) | மேற்கோட்குறி | (“ ”) | அடைப்புக்குறி | ( ) |


இக்குறியீடுகளைக் கீழ்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் இடுக.

16. நீங்கள் அவரைக் கண்டீர்களா
17. நான் இன்று கோயிலுக்குச் சென்றேன்
18. பருப்பு அவரை பால் முட்டை ஆகியவற்றில் புரதம் உண்டு
19. விளையாட்டு மைதானத்திற்குச் சென்றாள் உடற்பயிற்சி செய்தாள் வீட்டுக்குத் திரும்பினாள்
20. நல்ல நிருக்குரிய பண்புகளாவன நிறம் மணம் சுவையின்மையாகும்
21. நண்பனே
22. பொய் சொல்வதைப் பார்க்கிலும் இது நல்லது ஐயா என்று அந்தச் சிறுவன் பணிவுடன் சொன்னான்
23. கரி யானை மிகவும் பெரியது

★ கீழ்வரும் விடுகதைகளை வாசித்து விடுவிக்க.

24. பார்த்தால் பார்ப்பேன் சிரித்தால் சிரிப்பேன் அழுதால் அழுவேன் நான் யார்?
 ........................................................
25. அண்ணன் தம்பி இருவர். அவர்கள் சேர்ந்திருக்கும் நேரத்தை விட பிரிந்திருக்கும் நேரம்தான் அதிகம். அவர்கள் யார்?
 ........................................................

★ ஒரு சிற்றுண்டிச் சாலையில் ஒருநாளில் செய்யப்பட்ட பலகார வகைகள் கீழே உள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது. இவற்றின் விலை விபரம் வடை, இட்லி, மோதகம், எதுவாயினும் ரூபா5.00, இடியப்பம் ரூபா 2.50, தோசை ரூபா 4.00.




26. செய்யப்பட்ட மோதகங்களின் எண்ணிக்கை 35 எனின், அதை வரைபில் குறித்துக் காட்டுக.
27. செய்யப்பட்ட பலகாரங்களின் விற்பனை மூலம் பெறப்படும் பணம் எவ்வளவு?
 ........................................................
28. மிகவும் கூடுதலாகச் செய்யப்பட்ட பலகாரம் எது? அதன்மூலம் பெறப்படும் பணம் எவ்வளவு?
 ........................................................
29. மிகவும் குறைவாகச் செய்யப்பட்ட பலகாரம் எது? அதன் மூலம் பெறப்படும் பணம் எவ்வளவு?
 ........................................................
30. இவை இரண்டின் மூலமும் பெறப்படும் பணத்தொகைகளுக்கு இடையேயான வித்தியாசம் எவ்வளவு?
 ........................................................
31. எப்பலகாரத்தின் எண்ணிக்கையின் இருமடங்காக வடையின் எண்ணிக்கை உள்ளது?
 ........................................................

★ வரன், கண்ணன், மஞ்சு, சாயி, அருண் ஆகிய மாணவர்கள் ஒரு U வடிவில் சீமெந்துத் தரையில் அமர்ந்திருந்தார்கள். இவர்கள் அமர்ந்திருந்த ஒழுங்கு வருமாறு. கண்ணன் மத்தியிலும் கண்ணனுக்கு வலதுபுறம் அருண், இடது புறம் சாயியும், இருகரைகளிலும் வரனும், மஞ்சுவும் அமர்ந்திருந்தார்கள். ஆனால், அருண் மஞ்சுவுக்கு அருகில் அமர்ந்திருந்தான்

32. சீமெந்துத் தரையில் அமைர்ந்திருந்த சிறுவர்களின் எண்ணிக்கை எத்தனை?
 ........................................................
33. கண்ணனுக்கும் வரனுக்கும் இடையில் அமர்ந்திருந்தவர் யார்?
 ........................................................
34. மஞ்சுவுக்கு எதிரே அமர்ந்திருந்தவர் யார்?
 ........................................................
35. சாயியின் இடப்புறம் அமர்ந்திருந்தவர் பெயரை எழுதுக.
 ........................................................

★ வரனின் தற்போதைய வயதின் இரண்டு மடங்கிலும் 2 வயது குறைந்தவர் சாயி ஆவார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரனின் வயது 4 ஆண்டுகள் ஆகும் எனின்,

36. வரனின் தற்போதைய வயது என்ன?
 ........................................................
37. சாயியின் தற்போதைய வயது என்ன?
 ........................................................
38. இன்னும் நான்கு வருடங்களின் பின் வரனின் வயது என்ன?
 ........................................................
39. வரனின் அப்பாவும், சாயியின் அப்பாவும் சகோதரர்கள் ஆயின் வரன் சாயிக்கு என்ன உறவு? ........................
40. 30/100 என்னும் பின்னத்தை நிழல்படுத்திக் காட்டும் உரு பின்வருவனவற்றில் எது?



உரு I உரு II உரு III

★ கீழ்வரும் அட்டவணையில் முதலாவது நிரையில் காட்டப்பட்டுள்ள உணவுப் பொட்கள் எந்த வகையைச் சார்ந்தவை என்பதைக் காட்ட உரிய கூட்டினுள் (✓) என்னும் அடையாளத்தைக் இட்டுக் காட்டுக. உதாரணத்துக்கு ஒன்று செய்து காட்டப்பட்டுள்ளது.

| உணவுப்பொருள் | பழங்கள் | இலைக்கறி | காய்கறி | கிழங்குப் பயிர் | வாசனைப் பொருள் |
|---|---|---|---|---|---|
| உ+ம்:- வெண்காயம் | | | | | ✓ |
| 41. வாழைப்பழம் | | | | | |
| 42. அகத்தி | | | | | |
| 43. பச்சைமிளகாய் | | | | | |
| 44. புடலங்காய் | | | | | |
| 45. பப்பாசிப். பழம் | | | | | |
| 46. கீரை | | | | | |
| 47. மரவள்ளி | | | | | |
| 48. பூசணிப்பழம் | | | | | |
| 49. கரட் | | | | | |
| 50. கறிவேப்பிலை | | | | | |


★ கீழ்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (R) எனவும் பிழையாயின் (W) எனவும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.

51. சார்ஸ் எனும் ஒருவகை நோயால் அண்மைக்காலத்தில் அதிகளவு மக்கள் பாதிக்கப்பட்டனர். ☐
52. காய்ந்த மரம் ஒரு சிறந்த மின்கடத்தியாகும். ☐
53. நிறையுணவு என்பது எல்லாப் போசணைப் பெறுமானங்களும் கொண்ட உணவாகும். ☐
54. களிமண் துணிக்கைகள் கைக்கு சொரசொரப்பானவை மிகவும் பெரியவை. ☐
55. இந்த ஆண்டு அமெரிக்கப் படைகளுடன் சண்டையிட்ட நாடு ஈராக் ஆகும். ☐

★ மிகவும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

56. 
இப்பரிசோதனையின் முடிவு
 1) வளிக்கு நிறையுண்டு
 2) வளிக்கு இடத்தை அடைக்கும் ஆற்றலுண்டு
 3). வளியை நாம் பார்க்க முடியும்

57. 
இந்த அங்கிசார்பாகச் சரியானது
 1) நன்நீரில் வாழும்
 2) இது நோய்பரப்புவதில் ஈடுபடும்
 3) கோடைகாலத்தில் அதிகமாகப் பெருகும்.

58. 
இது உணவு தயாரிக்கப்பயன்படும் இப் பொருள் தொடர்பான கூற்றுக்களில் தவறானது.
 1) கைபிடி இரும்பாலானது
 2) கைபிடி மரத்தாலானது.
 3) கரண்டிப்பாகம் இரும்பாலானது.

59. கீழ்வரும் இரும்பு ஆணிகளுள் மிகவும் மங்கியுள்ள ஆணி




60. சூடாக்கும்போது மாற்றமடையாத பொருள்
 1) மெழுகுதிரி 2) பனிக்கட்டி 3) வெண்கட்டி
61. விலங்குகள், தாவரங்களில் இருந்து வேறுபடுவது அவை
 1) வளர்ச்சியடைவதில் 2) பெருகுவதில் 3) இடம்பெயருவதில்

★ கீழ்வரும் தமிழ் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.

62. வானம்........................ 63. நீர்........................
64. பாப்பா........................ 65. திகதி........................

★ கீழே சில ஆங்கிலச் சொற்கள் உண்டு. அவற்றில் விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான எழுத்தை அருகே இருந்து தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.

| | | | |
|---|---|---|---|
| 66. K--ife | 1) n | 2) o | 3) e |
| 67. Si--ter | 1) t | 2) s | 3) e |
| 68. Cla--sr--om | 1) s,o | 2) o,s | 3) s,u |
| 69. Sta--p | 1) p | 2) m | 3) n |

★ உமக்கு ஒரு தினக்குறிப்பு (டயறி) ஒன்று பரிசாகக் கிடைத்துள்ளது. அதன் முன்புறத்தில் பின்வருமாறு காணப்பட்டது. இதில் உமக்கு பொருத்தமானவற்றை நிரப்புக.

சொந்தக் குறிப்புக்கள்.

70. பெயர் :-........................................
71. வீட்டு விலாசம்:-........................................
72. பாடசாலை :-........................................
73. தரம் :-........................................
74. வகுப்பாசிரியர் பெயர்:-........................................
75. தொலைபேசி இலக்கம்:-........................................

★ "நான் ஒரு பழைய குடை" என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களுக்கு குறையாது இருக்கத்தக்கவாறு குடையின் சுயசரிதையை எழுதுக.

76........................................ 77........................................
78........................................ 79........................................
80........................................ 81........................................

## 5ம் தர புலமைப் பரட்சை வினாத்தாள்—40

மாணவர்முழுப்பெயர்: ........................................
பாடசாலையின் பெயர்:........................................
வீட்டின் முகவரி:........................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 05.11.2003இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

குறிப்பு:-மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத் தாள்களை வைத்துக் கொண்டு, வினாக் களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாக குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
15,வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 38

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர்கள் பெயர் விபரம் வருமாறு:**

01. இ. இராஜப்பிரவிந்தன்- மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை
02. த. கிருத்திகா- வரணி மகாவித்தியாலயம்
03. மா. நாகவதனி- தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி
04. ச. நந்துஜா- யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
05. யோ. பிரிந்தா- வரணி மகாவித்தியாலயம்
06. ம. துவாரகன்- உடுவில் மகளிர் கல்லூரி
07. மா. நிரோஜி- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
08. சி. மிறோஜினி- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
09. க. சுதர்சனா- வரணி மகாவித்தியாலயம்
10. சி. துளசிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
11. அ. பவித்திரா- அளவெட்டி அருணோதயக் கல்லூரி
12. க. கலீபன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
13. ஜோ. ஜெயசீலன்- தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
14. கு. செந்துசாயினி- வரணி மகாவித்தியாலயம்
15. க. தனுசீலன்- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
16. சி. பிரியவருண்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
17. த. திவாகர்- துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
18. பி. கிருத்திகா- தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
19. பு. உஷ்சாந்தி- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
20. து. வைஷ்ணவி- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
21. ச. சோபிகா- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
22. ர. சாம்பவி- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
23. க. சிந்துஜன்- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
24. நா. சிவனியா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
25. த. சரண்யா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
26. நா. தேனுயா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
27. ம. கீர்த்திகன்- இணுவில் மத்திய கல்லூரி
28. அ. ரோஜிதா- நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலை
29. சி. காயத்திரி- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
30. வே. சரண்யா- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
31. பூ. திலக்ஷி- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
32. சா. ஆதவன்- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
33. லி. கருஷன்- இணுவில் மத்திய கல்லூரி
34. செ. திலக்ஷன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
35. சி. சுபாங்கன்- உடுவில் மகளிர் கல்லூரி
36. கோ. பிரதீபா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
37. இ. பவீசன்- உடுவில் மகளிர் கல்லூரி
38. உ. சுகந்தன்- அளவெட்டி அருணோதயக் கல்லூரி
39. கி. தீபிகா- இணுவில் இந்துக்கல்லூரி
40 சி. தர்சிகா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
41. ந. நிரோகஜன்- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலை
42. த. நீருஜா- வல்வை றோ.க.த.க. பாடசாலை
43. செ. கலைச்செல்வி- வரணி மகாவித்தியாலயம்
44. சி. பிருந்தினி- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
45. அ. சுகிர்தன்- யா/ மத்திய கல்லூரி
46. த. தபோஜனன்- இணுவில் மத்திய கல்லூரி
47. எஸ். அமுதீசன்- நல்லூர் ஜோன்பொஸ்கோ வித்தியாசாலை
48. தி. துவாரகன்- தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
49. தி. கஜிதா- வரணி மகாவித்தியாலயம்
50. க. திகல்யா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
51. ஜெ. நிறோஜினா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம
52. ம. டக்ஸ்சன்- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
53. சி. டினோயன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
54. செ. சதீஸ்ராஜ்- சங்கானை ஸ்தான அ.மி.த.க். பாடசாலை
55. செ. ஆருணன்- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
56. க. அகிலன்- வரணி மகாவித்தியாலயம்
57. செ. திலக்ஷனா- வரணி மகாவித்தியாலயம்
58. ம. கஜீபா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
59. யூ. நிதர்சன்- யா/புனித பத்திசிரியார் கல்லூரி
60. ஜெ. ஸஜீபன்- ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை
61. ஞா. தாரணி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
62. ச. ஜயகணேஸ்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
63. க. செல்வி - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
64. பா. கிறிஸ்ரின்வேணி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
65. ந. ஸ்ரீபதிசர்மா- அளவெட்டி அருணோதயக்கல்லூரி
66. நீ. நிறுாயினி- யா/திருக்குடும்ப கன்னியர்மடம்
67. சி. ஜெதீசன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
68. கு. ஜெய்சினி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
69. த. விஜிதன்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
70. இ. பிரியங்கா- துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
71. கோ. வினோதினி- வரணி மகாவித்தியாலயம்
72. த. கோபிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
73. க. கோபிகா- சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலை
74. ம. ஜனனி- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
75. பொ. கோகிலன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
76. சோ. தனஞ்சயன்- தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை
77. செ. பிரமிளா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
78. பா. கௌசிகன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
79. அ. ராஜ்கரன்- கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி
80. ச. சுவஸ்திகா- இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை
81. நா. சாம்பவி- வரணி மகாவித்தியாலயம்
82. சி. சிறிவிந்துஜன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
83. சி. சரணிகா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம
84. அ. பிறேமி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
85. கி. நிதர்சன்- வரணி மகாவித்தியாலயம்
86. அ. பூரணி- வரணி மகாவித்தியாலயம்
87. சி. சுஜீபா- வட இந்து மகளிர் கல்லூரி
88. க. அகலியா- வரணி மகாவித்தியாலயம்
89. வ. விதுஷன்- ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
90. ஆ. லோகானந்தன்- ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
91. க. அனுஜன்- ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
92. ப. சஞ்சிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
93. செ. கலிஸ்ரா- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலை
94. சி. விதுனா- இணுவில் இந்துக் கல்லூரி
95. நே. லாவன்யன்- தாவடி இ.த.க. பாடசாலை
96. ஜி. அபர்ணா- யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
97. ஜெ. உஷானி- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
98. ச. சர்மிஜா- சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலை
99. ர. யதுர்சன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
100. அ. அகல்யா- சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை
101. ப. சுகீர்த்தனா- தேவரையாளி இந்துக் கல்லூரி
102. அ. ஜெறோம்- யா/மத்திய கல்லூரி
103. ச. லக்ஷிகா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
104. ச. சஜுதீப் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
105. தி. அருந்தசா- கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி
106. சு. அருளினி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
107. இ. அனோஜிதா- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
108. ச. சுவீபன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
109. இ. நிவேதா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
110. சி. சமீரா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
111. ச. ஷண்மதுரன்- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
112. இ. றூபதர்சினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
113. இ. காவேரி- யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
114. கீ. அச்சுதன்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
115. க. நிரோஜன்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
116. சி. தினோசா- வரணி மகாவித்தியாலயம்
117. பா. ஆர்த்திகன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
118. யோ. ஜானுர்ஸ்- ஆனைப்பந்தி, மெ.மி. வித்தியாலயம்
119. ந. கோபிகா- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
120. ச. அனுசா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
121. க. அனுசியன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
122. த. கஜேந்திரன்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
123. யோ. டர்சிகா- கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை
124. அ. துவாரகன்- வரணி மகாவித்தியாலயம்
125. செ. வினோதா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
126. ம. மதுஷா- நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்
127. ஜெ. தாட்ஷாயினி- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
128. செ. சாருகா- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
129. த. ரூசிகா- இணுவில் மத்திய கல்லூரி
130. பா. சசீந்திரன்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
131. கு. பிரசாந்- யா/மத்திய கல்லூரி
132. செ. ராஜ்குமரன்- சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலை
133. ச. அபிநயா- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
134. க. லோகராஜ்- கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை
135. ஆ. கஜீபன்- யா/மத்திய கல்லூரி
136. ப. வேனுஜன்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
137. ஜா. நரேந்திரன்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
138. ஸ்ரீ. கஸ்தூரி- அச்சுவேலி மத்திய கல்லூரி
139. ச. அருண்- இணுவில் மத்திய கல்லூரி
140. ந. தேனுகா- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
141. சி. கெஜரூபன்- தாவடி இ.த.க. பாடசாலை
142. சு. கிருஷ்சாந்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
143. க. சகாதேவன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
144. இ. மிதுசன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
145. வோ. பானுஷா- வரணி மகாவித்தியாலயம்
146. சீ. சுஜீபனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
147. த. பிரசாந்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
148. க. புவிதாயினி- வரணி மகாவித்தியாலயம்
149. செ. துவாரகன்- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
150. ந. கேதரன்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
151. இ. வேனுகா- வரணி மகாவித்தியாலயம்
152. வி. அமலா- நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்
153. சி. பகீரதன்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
154. வே. தினோசினி- வரணி மகாவித்தியாலயம்
155. உ. டென்சிகா- சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலை
156. பா. கார்த்தீபன்- வரணி மகாவித்தியாலயம்
157. தி. தேனுஜன்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
158. ச. திலீப்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
159. த. நிறோஜினி- திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்
160. கு. பிரதீபா- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
161. செ. றகீம்டிநெல்சன்- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
162. ச. அனுஷா சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
163. தி. றஜிதா- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
164. ர. நிருபன்- வரணி மகாவித்தியாலயம்
165. ந. தரிசன்- வரணி மகாவித்தியாலயம்
166. கா. கஜீபன்- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
167. த. சுகன்யா- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
168. தி. யசோதினி- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
169. பா. கஜலக்சன்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
170. சி. பிரணவன்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
171. க. உஷாந்தன்- வரணி மகாவித்தியாலயம்
172. சி. பாமினி- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
173. த. கஜனிகா- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
174. செ. கலையரசி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
175. கு. விஜிதா- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
176. இ. வேணுகா- வரணி மகாவித்தியாலயம்
177. த. சத்தியஜித் - ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
178. யோ. வொசின்ரன்- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
179. அ. கனிஷ்ரா- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
180. பி. டிபன்ராஜ்- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
181. மோ. தட்சாயினி- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
182. த. சயந்தன்- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்

## மட்டு. இரு கிராமங்களில்
# 20 கோடி ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர்ப் பற்று, ஏறாவூர் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதேசங்களில் 20 கோடி ரூபா செலவில் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

இதற்கென துறைசார்ந்த அமைச்சுக்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு நிதி நிறுவனங்களிடம் இருந்து நிதிபெறப்பட்டுள்ளதாக வீடமைப்புப் பிரதி அமைச்சர் வசீர்சேகு தாவுத் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் கல்வி, அபிவிருத்தி, சுகாதாரம், போக்குவரத்து, வீதி அமைப்பு, மின்சார, நீர் விநியோகம், கைத்தொழில் அபிவிருத்தி உட்பட சகல உட்கட்டமைப்பு வசதிகளும் இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தத் திட்டம் அடுத்த வருடம் டிசம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்படவுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

## வினாத்தாள் 38-ன் விடைகள்

01. காலைவேளை
02. மாலைவேளை
03. காக்கை, குயில்
04. மின்மினி, வௌவால், தவளை, கூகை
05. 1. சூரியன், 2. சந்திரன்
06. **Flower**
07. **Crow**
08. **Moon**
09. **Air**
10. **Frog**
11. **Light**
12. தவளை
13. காகம்
14. வௌவால்
15. மின்மினி
16. பூந்தோட்டம்
17. தாமரை
18. சுருங்குது
19. வாடியது
20. கா கா, கூ கூ
21. ரூபா 25 சதம் 60
22. ரூபா 30
23. ரூபா 99
24. ரூபா 1048 சதம் 75
25. ரூபா 58 சதம் 75
26. வியாழன்
27. திங்கள்
28. சனி, ஞாயிறு
29. புதன்கிழமை
30. 1150 **& gh**
31. 100 **kg**
32. 54 **g**
33. 50 **ml**
34. 15 **Cm**
35. எரிதலுக்கு வளி அவசியம்
36. ஒளி முறிவடைகின்றது
37. ஒளி நேர் கோட்டில் செல்லும்
38. நூல் மின்னைக் கடத்தாது
39. காந்தம் இரும்பைக் கவரும்
40. **Sri Lanka**
41. இந்தியா
42. பாக்குநீரிணை
43. திருகோணமலை
44. சீமெந்துத்தொழிற்சாலை
45. இந்து சமுத்திரம்
46. மட்டக்களப்பு
47. மத்திய மலைநாடு
48. இயக்கர், நாகர்
49. இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனம்
50. இலவசக்கல்வி, இலவசசீருடை, இலவச பாடநூல்,இலவச உணவு
51. இலவச மருத்துவ வசதி

52. (2) 53. (1)
54. (1) 55. (2)
56. (3) 57. (1)
58. (2) 59. (5) 60. (4)

61. தொடக்கம் 65ற்கான விடைகள்

| அங்கி | நீர் | தரை | தாவரம் | மாமிசம் | அனைத்தும் | குட்டி | முட்டை |
|---|---|---|---|---|---|---|---|
| நத்தை | ✓ | ✓ | ✓ | | | | ✓ |
| கரப்பான் | | ✓ | | | ✓ | | ✓ |
| வௌவால் | | ✓ | ✓ | | | ✓ | |
| எலி | | ✓ | ✓ | | | ✓ | |
| தவளை | ✓ | ✓ | | ✓ | | | ✓ |

66 தொடக்கம் 70ற்கான விடைகள்

| ரேகை | புகை | தரை | நீரலை | பனை ஓலை | தோடம்பழம் | தண்ட வாளம் | முட்டை |
|---|---|---|---|---|---|---|---|
| சுருள்ரேகை | ✓ | | | | | | |
| அலைரேகை | | | ✓ | | | | |
| கோணரேகை | | | | ✓ | | | |
| வட்டரேகை | | | | | ✓ | | ✓ |
| சமாந்தரரேகை | | | | | | ✓ | |

71 தொடக்கம் 75ற்கான விடைகள்

| வாத்தியக் கருவி | நரம்புக் கருவி | வளிநிரல் கருவி | தோற் கருவி |
|---|---|---|---|
| வீணை | ✓ | | |
| மேளம் | | | ✓ |
| புல்லாங் குழல் | | ✓ | |
| வயலின் | ✓ | | |
| உடுக்கு | | | ✓ |

76-81 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் அமைந்த 6வாக்கியங்கள் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஆகக்குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

## மடு வலயத்தில் மாதிரி முன்பள்ளி

(மருதங்கேணி)

மடு கல்வி வலயத்தில் வட்டக்கண்டல் காத்தான் குளப் பகுதியில் புனித சூசையப்பர் மாதிரி முன்பள்ளியும் சிறுவர் பூங்கா ஒன்றும கடந்த ஞாயிறன்று வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மன்னர் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் ஆகியன ஒன்றிணைந்து யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மேற்படி முன்பள்ளியையும், சிறுவர் பூங்காவையும் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-35)

# ஐ.தே.மு. அரசுக்கு எதிராக 20 ஆயிரம் முறைப்பாடுகள்

(கொழும்பு)

கடந்த வருடம் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிராக பொது மக்களிடம் இருந்து 20 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக எதிர்க்கட்சி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் இம் முறைப்பாடுகள் யாவும் எழுத்து மூலமாகவும், வாய்மொழி மூலமாகவும் பெறப்பட்டன.

இதில் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக 6 ஆயிரம் முறைப்பாடுகளும் அரசின் வேலைத்திட்டங்கள், தொழில் முயற்சிக் கடன் என்பவற்றுக்கு எதிராக 5 ஆயிரம் முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இம்முறைப்பாடுகள் அனைத்தும் பாராளுமன்றப் பொதுமக்கள் முறைப்பாட்டுச் சபையிடமும் ஆலோசனைத் தெரிவுக்குழுவிடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அடிப்படை மனித உரிமைமீறல் மற்றும் முறைகேடுகள் தொடர்பான பிரிவுகளிடமும் இம் முறைப்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-61)

## கூடைப்பந்தாட்டச் சங்கம் இணையத்தளத்தில் இணைவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் கடந்த 16ஆம் திகதி முதல் www.Jdba online.org என்ற இணையத்தள முகவரியிலும், Jdba online@vucomp.net என்ற மின் அஞ்சல் முகவரியிலும் இணைந்துள்ளது. (உ-10)

## ச...ர்...ஆரம்பம்...?




# சிறுவர் பாராளுமன்றில் பங்கேற்க யாழில் இருந்து 15 பேர் செல்வர்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இன்றக்ட்ரிவ் மீடியா குறூப் ஏற்பாட்டில் கொழும்பில் நடைபெறவுள்ள சிறுவர் பாராளுமன்ற நிகழ்வில் பங்கேற்பதற்காக யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 15 மாணவர்கள் அங்கு செல்லவுள்ளனர்.

எதிர்வரும் 3ஆம் திகதியன்று மருதானை டவர் மண்டபத்தில் தமது உணர்வுகளை ஓவியங்கள் மூலமாக வெளிப்படுத்தவுள்ள இவர்கள், மறுநாள் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் ஆகியோர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளனர்.

யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களின் அனுசரணையுடன் கொழும்புசெல்லும் இச் சிறார்களின் பயணச் செலவுகள் அனைத்தையும் ஸ்ரீலங்கா இன்றக்ட்ரிவ் மீடியாக் குறூப் ஏற்றுள்ளது. (உ)

## சிறு முயற்சியாளர் அறிமுகப் பயிற்சி வகுப்பு

(தொல்புரம்)

சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் அனுசரணையுடன், கொழும்பு ஐ.எல்.ஓ நிறுவன சேவையாளர்களால் யாழ். குடாநாட்டில் உள்ள சர்வதேச தொழிலாளர் ஒருங்கிணைப்பு சிறு முயற்சியாளருக்கான அறிமுகப் பயிற்சி வகுப்பொன்று இன்று மு.ப. 10.00 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் அறிமுகப் பயிற்சியில் யாழ். மாவட்ட அரச பிரதிநிதிகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், வங்கிகளின் பிரதிநிதிகள், துறைசார்ந்தோர் மற்றும் தொழில் முன்னிலைப் பயிற்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங் கவுள்ளனர்.

மேற்படி பயிற்சித் திட்டமானது, கடந்த 2000 ஆம்ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் தென்பகுதிகளில் பரிட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றியளித்ததன் பிரகாரம் முதன் முதலாக யாழ். குடாநாட்டில் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-70)

# உலகக் கிண்ணத் தோல்வியை ஈடுசெய்தது இந்தியா

இந்தியாவில் இடம்பெற்றுவரும் மும்முனை ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்திய மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான போட்டியில் இந்திய அணியானது 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டுள்ளது.

கடந்த உலகக் கிண்ணப் போட்டியின் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியிடம் படுதோல்வி அடைந்த இந்திய அணியானது இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை வென்றதன் மூலம், தமது ரசிகர்களை சற்று மகிழ்ச்சியடையச் செய்திருக்கின்றது என்பதுடன், உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் ஏற்பட்ட தோல்விக்குப் பதிலடியான வெற்றியாகவும் இவ் வெற்றி கருதப்படுகின்றது.

இந்தியாவின் குவாலியூரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய இந்திய அணியானது நிர் ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 283 ஓட்டங் களைப் பெற்றுக் கொண்டது. இப் போட்டியில் இந்திய அணி சார்பில் துடுப்பாட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் 100 ஓட்டங்களையும், வி.வி.எக்ஸ். லஷ்மன் 102 ஓட்டங் களையும் பெற்றுக்கொடுத்து தமது அணியின் வெற்றிக்கு பெரும் பங்காற்றியிருந்தனர்.

இதன்மூலம் சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் தனது 35ஆவது சதத்தினைப் பூர்த்தி செய்துகொண்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும், வி.வி.எக்ஸ். லஷ்மன் தனது இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான சதத்தினை நிறைவு செய்திருந்ததுடன், இருவரும் இரண்டாவது விக்கெற்றை இணைப்பாட்டமாக 191 ஓட்டங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான ஆட்டத்தின் மூலம் முதலாவது கிரிக்கெட் இணைப்பாட்டமாக 132 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

எனினும், வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெறுவதற்கு ஆஸ்திரேலிய அணியின் பின்வரிசை ஆட்டக்காரர்கள் எவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடாததின் காரணமாக இந்திய அணியிடம் 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவிக் கொண்டது. அவுஸ்திரேலிய அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டக்களை இழந்து 246 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர். (உ-68)




## பங்களாதேஷ் அணிக்கு அடிக்குமேல் அடி

இங்கிலாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டாக்காவில் நடைபெற்று முடிந்துள்ள முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியினை வெற்றிகொண்டுள்ளது. இதன மூலம் இவ்விரு அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட இத் தொடரில் இங்கிலாந்து அணி 1:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியில் திகழ்கின்றது.

பங்களாதேஷ் அணியானது டெஸ்ட் அந்தஸ்து கிடைக்கப்பெற்ற பின் 25 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி அவற்றில் 24 போட்டிகளில் தோல்வியைத் த்ழுவிக் கொண்டுள்ளதுடன், ஒரு போட்டி மட்டுமே வெற்றிதோல்வி இன்றிய பெறுபேற்றையும் பெற்றுள்ளது. எனினும், இதுவரை எந்த டெஸ்ட் போட்டிகளிலும் பங்களாதேஷ் அணி வெற்றிபெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணியானது, அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியானது அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 295 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

தொடர்ந்து தனது 2வது இன்னிங்ஸில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 4வது நாள் ஆட்டநேர முடிவின்போது 6 விக்கெட் இழப்பிற்கு 245 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதும், 5ஆம் நாள் ஆட்டம் தொடங்கி 10 ஓட்டங்களை மேலும் பெற்றுக்கொண்டதுடன், தனது கைவசம் இருந்த மிகுதி 4 விக்கெட்டுக்களையும் இழந்து 255 ஓட்டங்களுக்குத் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் 164 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாட்டத்தைத் தொடர்ந்த இங்கிலாந்து அணியானது 3 விக்கெட்டை மட்டுமே இழந்து வெற்றி இலக்கான 164 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன், 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை இப்போட்டியில் வெற்றிகொண்டது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நாளை பங்களாதேஷில் உள்ள சிட்டாகொங் நகரில் நடைபெறவுள்ளது. (உ-68)

## இலங்கைக் கால்பந்தாட்ட அணிகள் உஸ்பெஸ்கிஸ்தானில்

ஆசிய கால்பந்தாட்டக் கூடடுச் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் 17 மற்றும் 20 வயதிற்குட்பட் சம்பியன் சிப் கால்பந்தாட்டப் போட்டிகளில் இலங்கை அணிகளும் கலந்துகொள்ளவுள்ளன.

உஸபெஸ்கிஸ்தானில் நடைபெறவுள்ள இப் போட்டிகளுக்காக இலங்கையில் இவ்விரு அணிகளும் கடந்த வெள்ளிக்கிழமை அங்கு பயணமாகியுள்ளன.

இந்த இரண்டு பிரிவுகளிலும் நடைபெறவுள்ள தகுதிகாண் போட்டிகளில் இலங்கை, உஸ்பெஸ்கிஸ்தான் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் பங்குபற்றவுள்ளன. இன்று ஆரம்பமாகவுள்ள போட்டியில் இலங்கையின் இரண்டு அணிகளும் உஸ்பெஸ்கிஸ்தான் நாட்டின் அணிகளுடனும் மோதவுள்ளன.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டு போட்டிகளிலும் இலங்கை மற்றும் பூட்டான் ஆகிய இரு நாட்டின் அணிகளும் மோதவுள்ளன.

17 வயதிற்குட்பட்ட இலங்கை அணிக்கு டி.எல்.ஜெயசிங்கவும், 20 வயதிற்குட்பட்ட இலங்கை அணிக்கு முகமட் சிப்ரானும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-68)

## இந்திய – பாகிஸ்தான்

# விளையாட்டு உறவு மென்மேலும் விரிவு

பாகிஸ்தான் அணியுடனான கிரிகெட் போட்டிகளில் விளையாடுவதற்கு இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளதினைச் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் வரவேற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை பாகிஸ்தான் அணியுடனான கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு இந்திய அணிக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக இந்திய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சராகப் பணிபுரியும் ஜஸ்வந்சிங்க அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து ஏற்கனவே திட்டமிட்டதன்படி எதிர்வரும் பெப்ரவரி மாதம் இந்தியக் கிரிக்கெட் அணியானது பாகிஸ்தானுக்கான கிரிக்கெட் விஜயத்தினை மேற்கொள்ளும் என இரு நாட்டின் அணிகளும் எதிர்பார்ப்பதாகவும் தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இதற்கான புதிய திட்டத்தினை வெளியிட்டுள்ளது.

அதாவது 2004 ஆம் ஆண்டு பெப்ரவா! மாதம் 19ஆம் திகதிமுதல் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 3 டெஸ்ட் போட்டிகளிலும், சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் விளையாடுவதற்கான கால அட்டவணையுடன் கூடிய திட்டம் ஒன்றினையும் தனது தரப்பில் இருந்து வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இவ் யோசனைக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் இருந்து சாதகமான பதிலைத் தாம் எதிர்பார்த்திருப்பதாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் செய்தித் தொடர்பாளர் ஸமியுல் ஹஸன் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், நீண்டகாலமாக நடைபெறாமல் இருந்த இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் பயணங்கள் மீண்டும் இடம்பெறவிருப்பது இருநாட்டு ரசிகர்களுக்கு மட்டுமன்றி அனைத்துக் கிரிக்கெட் ரசிகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாக அமையும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இறுதியாக இந்திய அணி பாகிஸ்தான் அணியுடனான கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ளவென 1989-1990 கிரிக்கெட் பருவகாலத்தில் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-68)

## இன்று ஒரு தகவல்

# கெட்ட எண்ணம்!

சுவாமி சிவானந்தர் ஒரு சிறந்த மருத்துவர். அது மட்டுமல்ல சிறந்த தவயோகி. அவர் நமது மனித சமூகத்திற்காக நிறைய கருத்துக்களை, சிந்தனைகளை, சின்னச் சின்னக் கதைகளையெல்லாம் கூறியுள்ளார். கெட்ட எண்ணங்கள் நமது மனதில் தோன்றுகின்றதல்லவா? இதனால் ஏற்படும் விளைவுகளை மனோதத்துவ ரீதியில் ஆராய்ந்து சில கருத்துக்களையும் கூறியுள்ளார்.

ஒரு தவறான கருத்து அதாவது எண்ணம் இருக்கின்றதல்லவா? அது மனதில் முதலில் நுழைகின்றது. எதிராளியை எப்படிக் கெடுக்கலாம்? அவரை எப்படித் தாக்கலாம்? அவரது தோல்விக்கு எப்படிக் களம் அமைக்கலாம்? இப்படியெல்லாம் நமது மனதில் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்கும். இதை யோசிப்பவர்களுக்கு ஒரு விடயம் புரியவில்லை. இந்தக் கெட்ட எண்ணம் நமது உடலினுள் பல்வேறு விதமான மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்னும் நினைவு வந்து விட்டால் கெட்ட எண்ணத்தை மனதில் நுழைய விடாது தடுத்து விடலாம்.

அதனால்தான் தியானத்தை வலியுறுத்துபவர்கள் என்ன கூறுகின்றனர் என்றால் முதலில் உங்கள் மனதில் உள்ள குப்பைகளை வெளிப்படுத்துங்கள். குப்பைகளை வெளியேற்றிவிட்டால் மனது மிகுந்த சுத்தமாகி வீடும். அதன் பின் நல்ல காற்று வருவது போல் நல்ல எண்ணங்களையும், சிந்தனைகளையும் வளர்க்கலாம். அதற்கு முக்கியமானதாகத் தியானம் செயற்படுகின்றது.

ஒரு தெரு நாய் நமது வீட்டிற்குள் நுழைய முயற்சிக்கின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள். உடனே நாம் என்ன செய்வோம்? கதவைச் சாத்தி அதனை உள்ளே நுழைய விடாமல் தடுக்க முயற்சி செய்வோம். அப்போது ஒரு நாய் நமது வீட்டிற்குள் வந்தால் அதனால் பல சிக்கல்கள் வரும் என்பது நமக்குத் தெரியும். இதே உணர்வுடன் தான் நாம் இருக்க வேண்டும். கெட்ட எண்ணம் நமது மனதில் நுழைய முயற்சிக்கும் போது ஆரம்பத்திலேயே அதனைத் தடுத்து நிறுத்துகின்ற பக்குவத்தை நாம் உருவாக்கி விட வேண்டும். இந்த ஞானம் எமக்கு வந்து விட்டால் மனதில் ஒரு முடிவில்லாத அமைதியும் பேரின்பமும் கிடைக்கும். இதனால் உலகத்திற்கும் நன்மை. எம்மால் மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படப்போவதில்லை.

பெரிதாக ஒன்றும் வேண்டாம். ஒரு சாதாரணமான விடயத்தை எடுத்துக்கொள்வோமே. ''பிறரது துன்பத்திற்கு நான் காரணமாக இருக்கமாட்டேன்'' என்று ஒரு வாக்கியத்தை எழுதி வைத்துக்கொண்டு அவ்வப்போது அதனை எடுத்துப் பார்த்துக் கொண்டோமானால் கெட்ட எண்ணத்தை உள்ளே வரவிடாது ஆக்கி விடலாம்.

காமம், குரோதம், பேராசை, அகந்தை என்று எத்தனையோ விதமான கெட்ட எண்ணங்கள் உள்ளன. அவற்றை ஆரம்பக்கட்டத்திலேயே அதாவது அவை உள்ளே நுழைய முயற்சிக்கும்போதே தடுத்து நிறுத்தும் பயிற்சியை நாம் மேற்கொள்ளவேண்டும். இதற்கு மிகவும் முக்கியமாக இருப்பது தியானம். தியானத்தில் இருக்கும் போது இவற்றின் வேகம் குறைந்து கொண்டே செல்லுமாம். இந்தப்பயிற்சியை நாம் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும்.

வாழ்வில் முன்னேறிக்கொண்டிருக்கும் ஒருவரைப் பார்த்து நாமும் அந்த அளவிற்கு முன்னேற வேண்டும் என்ற ஆசை வரலாம். அது ஒன்றும் தவறே அல்ல. ஆனால் அவரது முன்னேற்றத்தை எப்படித் தடுக்கலாம் என்று நினைத்துப் பார்ப்பது தான் கெட்ட எண்ணம். இந்தக் கெட்ட எண்ணத்தினால் அவருக்கு பாதிப்பேற்படுத்த நாம் செய்யும் செயற்பாடுகள் அவர்களையும் பாதிக்கலாம். அதேவேளை, மனோரீதியாக முயற்சி செய்பவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த எண்ணம் எம் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டால் கெட்ட எண்ணம் நமது மனதிற்குள் வரவே வராது. பரிசுத்தமான எண்ணங்களுடன் நாம் வாழ்வோம். மனதில் சாந்தியும், அமைதியும் இருக்கும். முகத்தில் ஓர் மகிழ்ச்சி இருக்கும்.

மற்றோரைச் சந்திக்கும் போது நல்ல எண்ணங்களுடன் பேசலாம், நல்ல எண்ணங்களுடன் பழகலாம். நல்ல எண்ணங்களைப் பேசும்போதும், பழகும்போதும் ஒரு அருமையான ஆன்மீக அலைகள் இரு தரப்பிலும் ஏற்படும். இந்த ஆன்மீக அமைதி சுற்றுச் சூழலையும் அமைதிப்படுத்தும். இந்த மனோபாவத்தை வளர்த்தால் தான் இப்போது நாட்டில், வீட்டில், உலகில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பதற்றம், பேராசை, போர் ஆபத்துக்கள் தவிர்க்கப்படும். இதற்கு நல்ல எண்ணங்கள் துணை புரிவதாக சுவாமி சிவானந்தர் கூறியுள்ளார். பொறாமை உணர்ச்சியும் வேண்டாமே!

ஒரு வீட்டில் இரவு திருடன் வந்து விட்டான். கணவனையும் மனைவியையும் கட்டிப்போட்டுவிட்டு வீட்டில் உள்ள பொருட்களுடன் செல்லப்போகின்றான். அப்போது அந்த வீட்டுப்பெண்மணி கூறினார் ''ஐயா! எல்லாவற்றையுமே திருடி விட்டீர்கள்! இத்தோடு சேர்த்து இன்னொரு காரியத்தையும் செய்துவிடுங்கள். எங்கள் வீட்டில் திருடியது போன்று பக்கத்து வீட்டிலும் திருடிக்கொண்டு செல்லுங்கள். அப்போது தான் எனக்குச் சந்தோசமாக இருக்கும்'' என்றார். அதற்கு அந்தக் கள்வன் ''முதலில் அங்கே தான் திருடினேன். அந்த வீட்டுக்காரர்கள் கூறியதால்தான் நான் உங்கள் வீட்டிற்கு வந்தேன்'' என்றான்.

இளசை எஸ்.சுந்தரம்

# ஐ.நாவில் பிரதமர் ரணில் ஆற்றிய உரைக்கு அரபு நாடுகள் உடன்பாடு

## இதை டிரோன் நேரில் அவதானித்தாராம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரைக்கு அங்குள்ள பிரதிநிதிகள் எவரும் எதுவித ஆட்சேபனையும் தெரிவிக்காத அதே நேரம், அரபு நாடுகள் கூட எதுவித சர்ச்சையையும் எழுப்பவில்லை.

இதுதான் உண்மையான விடயம். பிரதமர் உரையாற்றிய சமயம் நானும் அங்குதான் இருந்தேன் என வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது விடயம் குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

உலகின் எந்தவொரு பகுதியிலும் யுத்தமொன்று நடைபெறுவதை எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் விரும்புவதில்லை.

எமது நாட்டில் கடந்த இரு தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தத்தின் கொடூரங்களை அனுபவ பூர்வமாக உணர்ந்த நாம் அவ்வாறான கொடிய யுத்தங்கள் இடம்பெறுவதை ஒருபோதும் ஆதரிக்கமாட்டோம்.

எமது நிலைமை இவ்வாறு இருக்கும் போது வெளிநாட்டு கொள்கைகள் யாவும் மிகத் தெளிவாகவே உள்ளன. எனவே தான் ஈராக்கில் இடம்பெற்ற யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கு இலங்கையின் நிவாரண உதவிகளாக 100 மெற்றிக்தொன் தேயிலையையும் ஒரு இலட்சம் தைத்த ஆடைகளையும் மிக விரைவில் அனுப்பி வைக்க உள்ளோம எனக் குறிப்பிட்டுளளார். (உ-18)

# தப்பியோடிய படையினரில் 637 பேருக்கு உத்தியோக பூர்வ பதவி விலகல் கடிதங்கள்

(தொழும்பு)

தப்பியோடிய படைவீரர்களில் ஆயிரத்து 939 பேர் தமது உத்தியோக பூர்வ பதவி விலகல் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

இராணுவத்தை விட்டுத் தப்பியோடி 3வருடங்கள் கடந்த இராணுவ வீரர்களுக்கு, உத்தியோக பூர்வமாக பதவி விலகுவது தொடர்பாக அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

இதற்கென கடந்த சில தினங்களாக கம்பஹா மாவட்டச் செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்ட நடமாடும் முகாமில் வீரர்கள் விலகுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இந் நடமாடும் முகாமிலேயே மேற்படி ஆயிரத்து 939 பேரும் தமது விலகல் தொடர்பான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

இவர்களில் 637 பேருக்கு உத்தியோக பூர்வமாக பதவி விலகியதற்கான கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனையோருக்கு உரிய கடிதங்கள் மற்றும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறியதால் உத்தியோக பூர்வ பதவி விலகல் கடிதங்கள் வழங்கப்படவில்லை என இராணுவப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (தி-61)

## இராசி பலன்

**29. 10. 2003**

**(ஐப்பசி 12, புதன்)**

| | |
|---|---|
| சதுர்த்தி | - மு.ப.10.06வரை |
| கேட்டை | - மு.ப.11.32 வரை |
| இராகுகாலம் | - 12.03 - 1.33 |
| சுபநேரம் | - 4.33-6.03 |

**மேடம்**
புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, காரிய தாமதம், திடீர் நன்மை.

**இடபம்**
எதிர்பாராத மனஸ்தாபம், காரிய தடங்கல், தர்மம், வாகன பயம்.

**மிதுனம்**
சனேகிதர் நல்வரவு, களஸ்திர நன்மை, முயற்சிகள் கைகூடும், பிரயாணம்.

**கடகம்**
குடும்ப நலம், தனவரவு, புத்திசாதுரியம், தொழில் விருத்தி.

**சிங்கம்**
வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், காரிய தாமதம், கற்பனை மிகுதி.

**கன்னி**
புதிய செய்தி, ரோகநிலை, பிரயாணம், தாய்வழி உறவு.

**துலாம்**
அன்னியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, காரிய சிந்தை, தொழில் முன்னேற்றம்.

**விருச்சிகம்**
கோபப்படுதல், தனவிரயம், சயன சுகக்குறைவு, காரிய தாமதம்.

**தனுசு**
நல்ல முயற்சி, பிறர் உதவி, எதிர்பாராத நன்மை, ஆழ்ந்த சிந்தை.

**மகரம்**
எடுத்த கருமங்கள் தாமதமாகும், பிரயாணம், அமைதிக்குறைவு, நண்பர்கள் வெறுப்பு.

**கும்பம்**
எடுத்த கருமங்கள்கைகூடும், வருமானம் அதிகரிக்கும், அதிக பிரயாசை, கலந்துரையாடல்.

**மீனம்**
கற்பனை மிகுதி, உற்சாகம், புதிய திட்டம் , காரிய நன்மை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# பௌத்தபிக்கு கடத்தப்பட்டு சுட்டுக் கொலை

(அத்துருகிரிய)

பௌத்த பிக்கு ஒருவர் இனந்தெரியாத ஒரு குழுவினால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

திக்வெல்ல உறுகமுவ பௌத்த கோயிலின் துணைப் பிரதம குருவான உறுகமுவ பஞ்ஞானந்த எனற பிக்குவே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

மூவர்கொண்ட இனந்தெரியாத குழுவொன்று இந்தப் பிக்குவை பலவந்தமாக ஆலயத்திலிருந்து அழைத்துச் சென்று சுட்டுக்கொன்றுவிட்டு தோட்டமொன்றில் சடலத்தை கைவிட்டுச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுட்டுக்கொல்வதற்கு முன்னர் அவரை அடித்து நிர்வாணமாக இழுத்துச் சென்றுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

வாயில் சூடுபட்டு இறந்த நிலையில் பிக்குவின் சடலம் இறப்பர் தோட்டமொன்றில் நிர்வாணமாகக் கிடக்கக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிக்கு சாஸ்திரம் கூறுவதன் மூலம் ஏராளமாகப் பணம் சம்பாதித்திருந்தார் என்றும் திக்வெல்ல நகரில் கடை ஒன்றை நடத்தி வந்தார் என்றும் கூறப்படுகிறது. பொலிஸார் புலன் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். கொலைக்கு பாவிக்கப்பட்ட வாகனம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. (பி)

# வட-கிழக்கு வைத்தியர்களுக்கு பாகிஸ்தானில் ஆஸ்பத்திரி முகாமைத்துவக் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

பாகிஸ்தான் அஹமதாபாத்தில் இயங்கும் சர்வதேச ஸ்தாபன முகாமைத்துவக் கல்லூரியில் வைத்தியசாலை முகாமைத்துவம் தொடர்பாக நடாத்தப்படவுள்ள குறுகிய காலக் கற்கை நெறியில் கலந்து கொள்வதற்கு வட-கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 8 டாக்டர்கள் புலமைப்பரிசில் பெற்று நாளை அங்கு பயணமாகவுள்ளனர்.

அடுத்த மாதம் 2ஆம்திகதி முதல் 7ஆம் திகதிவரை நடைபெறவுள்ள மேற்படி கற்கை நெறியில் கலந்து கொள்வதற்காக மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் நிர்வாகப்பிரிவு டாக்டர் ஆர். ரவீந்திரன், திருகோணமலை பொது வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் டாக்டர் திருமதி பீ.கே. ஞானகுணாளன், மன்னார் ஆதார வைத்தியசாலை டாக்டர் வி.பரமானந்தன், கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். விக்னேஸ்வரன்,

அச்சுவேலி சுற்றயல்கூறு வைத்தியசாலை டாக்டர் எஸ்.விமலேந்திரன், ஏறாவூர் மாவட்ட வைத்திய அதிகாரி எம். எச். எம்.தாரிக், கந்தளாய் மாவட்ட வைத்திய அதிகாரி ஈ.ரீ.பீ.டி.சில்வா மற்றும் கிண்ணியா மாவட்ட வைத்திய அதிகாரி ஏ.சமீம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ-18)

# சிலாபம் கடற்பரப்பில் 14 இந்திய மீனவர் கைது

(கொழும்பு)

சிலாபம் கடற்பிரதேசத்தில் சட்ட விரோத மீன்பிடித்தொழிலில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்களைக் கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

அண்மைக்காலங்களாக இக் கடற்பிரதேசத்தில் இந்திய மீனவர்களின் வருகை அதிகரித்ததைத் தொடர்ந்து கடற்படையினர் நடத்திய விசேட ரோந்துப் பணியின் போது இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர் என கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் ஜெயந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் பொருட்டு கடற்படையினர் கொழும்பு துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, கடந்த மாதம் பருததிதுறை கடற்பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் இருவரில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தமிழகப் படகோட்டி ஒருவர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (தி-61)

## பல்கலை மாணவர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அனைத்துப்பீட மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் ஒன்று இன்று மு.ப.11.00மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (உ)

குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று
– குறள்

# வலம்புரி

## இராணுவத் தளபதியின் அறிவுரை

சமாதான முயற்சி வெற்றியளிக்க ஒத்துழைப்பு வழங்குவது சகல தரப்பினரினதும் கடமையும் பொறுப்புமாகும் என இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் லயனல் பலகல்ல கூறியுள்ளார்.

ஆயுதப் படைகளின் பிரதம தளபதியாகப் பதவியேற்று உரையாற்றும் போதே மேற்கூறப்பட்ட கோரிக்கையை இராணுவத் தளபதி பலகல்ல விடுத்துள்ளார்.

இராணுவத் தளபதியாக லெப்ரினன் ஜெனரல் லயனல் பலகல்ல பெறுப்பேற்ற காலத்தில் இருந்து 'சமாதானம்' என்ற உயரிய பதம் அவரால் அடிக்கடி உச்சரிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு, சமாதானததை அடைந்து கொள்வதே இலங்கையின் இனப் பிரச்சினைக்கான ஒரே வழி என்பதை பலகல்ல அவர்கள் பலதடவைகள் சுட்டிக்காட்டியிருப்பது சமாதானத்தின பால் அவர் கொண்டுள்ள பற்றுறுதியைக் காட்டி நிற்கின்றது.

இராணுவத் தளபதியாக லயனல் பலகல்ல பொறுப்பேற்ற காலப் பகுதியில் இருந்து யுத்தம் ஓய்வு பெற்றிருப்பதால், அவர் கூறிய கருத்து தமிழர்கள் மத்தியில் ஆழமாக உளவாங்கப்பட்டுள்ளது.

அதேவேளை தளபதி பலகல்ல கூறிய கருத்து சகல தரப்பினரும் சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்பதில் இராணுவத் தரப்பும் உள்ளடங்கப்பட்டிருப்பது முக்கியமானதோர் விடயமாகும்.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் அது அரசும் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் இணக்கப்பாட்டை அடைவதன் மூலமே சாத்தியமாகும். அவ்வாறு நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமாயின் தமிழர் பிரதேசங்களில் இயல்பு நிலைமை ஏற்படுவது அவசியமாகும்.

எனினும், தமிழர் வாழ் பிரதேசங்களில் இயல்பு நிலை ஏற்படுவதற்கு இராணுவத்தின் குடியிருப்புக்களும், உயர் பாதுகாப்பு வலயங்களும் தடைக்கல்லாக உள்ளதென்பதை படைத் தளபதியாக இருக்கும் லயனல் பலகல்ல அறியாமல் இருந்திருக்க முடியாது.


அரசு முன்னெடுத்துள்ள சமாதான முயற்சியில் இராணுவத்தரப்பு இருதலைமைக்குள் அகப்பட்டு எவரது உத்தரவை நடைமுறைப்படுத்துவதென்ற சிக்கலில் அகப்பட்டுள்ளமை தெரிந்த விடயமாகும்.

அதாவது இலங்கையின் அரசியல் யாப்புத் தந்துள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும், பாராளுமன்ற ஆட்சி தந்த பாதுகாப்பு அமைச்சரும் உடன்பட்டு வராத கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், ஜனாதிபதி ஒரு பக்கமாகவும், பாதுகாப்பு அமைச்சர் மறுபக்கமாகவும் படைத்தரப்பிற்கு உத்தரவுகளைப் பிறப்பிப்பதால் படைத் தலைமையகம் எதனை நடைமுறைப் படுத்துவதென்பதில் பலவேறு குழப்பங்களை எதிர்நோக்கியுள்ளது, எனினும் ஆட்சிகள் கட்சிகளால் பிரிந்து நின்று உத்தரவுகளைப் பிறப்பிப்பதாலும் படையினர் சமாதானத்தின் தேவை உணர்ந்து தம்மை வழிப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

# ரெலிவ்சன் தொடர்ந்தும் இங்கு பணிபுரிவது நாட்டிற்குப் பெரும் கேட்டை ஏற்படுத்தும்

## ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பி.பி.சிக்குப் பேட்டி

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கும் எமக்கும் எந்தவிதமான பிரச்சினையும் ஏற்படவில்லை என்ப



தால் யுத்தநிறுத்தக் கண்காணிபபுக் குழு தொடர்ந்தும் தமது பணிகளை மேற்கொள்ளலாம் என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதக்கப்பல ஒன்று கடந்த 16ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிந்த சமயம் அதனை கடற்படையினர் தடுத்து நிறுத்துவதற்கு எடுத்த முயற்சி குறித்த செய்தியை கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜனரல் றிட் ஜவே ரெலிவ்சன் வெளியே கசிய விடடா எனக் குற்றம்சாட்டி அவரை உடனேயே நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் எனவும், அவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே பிரதமருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளதை அடுத்து, கண்காணிப்புக்குழு மத்தியில் கடும் அதிருப்தி எழுந்துள்ளதுடன் தமது பணியை தொடர்ந்தும் மேற்கொள்வதா? என்ற நிலையில் அவர்கள் இருப்பதாக வெளியாகிவரும் செய்திகள் குறித்து லண்டன் பி.பி.சி.தமிழ் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே ஹரீம் பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றித் தொடர்ந்தும் தெரிவிக்கையில், ஆயுதங்களுடன் வந்த கப்பலைக் கடற்படையினர் தடுத்து நிறுத்த எடுத்த நடவடிக்கைகளை புலிகள் அறிந்துகொள்ளும் வகையில் அம்பலப்படுத்தியுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜனரல் றிட்ஜ்வே ரெலிவ்சனை மட்டும்தான் நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என ஜனாதிபதி கூறினாரே தவிரக் கண்காணிப்புக்குழுவை வெளியேற வேண்டுமெனக் கூறவில்லை.

களத்தில் நடக்கும் பாசறை நடவடிக்கைகள், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிராந்திய மட்ட அதிகாரிகள், விடுதலைப்புலிகளின் கள உறுப்பினர்கள் ஆகியோருடன் எங்களுக்குள்ள தொடர்புகள் தொடரவே செய்யும்.

ஆனால், ரெலிவ்சன் கண்காணிப்புக்குழுவிற்குத் தலைவராக இருப்பதால் அவரின் திருப்தியற்ற செயற்பாடுகள் மற்றும் அரசியல் மற்றும் கள இரகசியங்களை முறையாகப் பேணாமையினால் அவரைத் தொடர்நதும் பதவியில் வைத்திருப்பது நாட்டிற்கு நல்லதல்ல. இதனால் நாட்டிற்குப் பேராபத்து ஏற்பலாம்.

இதேவேளை, பிரதமர் ரணில் வக்கிரமசிங்க இந்த விடயத்தில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. இதுபற்றிப் பேசுவதற்கும் எனக்கு அதிகாரம் இல்லை. இருப்பினும் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மீது இலங்கைக் கடற்படையினர் முற்றாக நம்பிக்கை இழந்து விட்டதால் அவர் அந்தப் பதவியில் இனியும் இருப்பது என்பது இயலாத காரியமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

(உ-62,10)

# இராணுவத்தினரின் செயற்பாடு சமாதானத்திற்குத் தடையானது

## இடம்பெயர்ந்தோர் சங்கச் சமாசம் பிரதமருக்குக் கடிதம்

(திருநெல்வேலி)

குடாநாட்டில் நிலைகொணடுள்ள படையினரும், அவர்களது இராணுவ செயற்பாடுகளும் தற்போது நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் பெரும் தடையாக இருக்கிறது எனத் தெரிவித்து வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கச் சமாசம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குக் கடிதம்ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அககடிதத்தில் மேலும் இராணுவத்தினர் சமாதானத்தையும் அதன் நலனையும் கருத்தில் கொள்ளாது, தமது நலன்களை மட்டுமே கருத்திற்கொண்டு செயற்பட்டு வரு கின்றனர்.

இவர்களின் செயற்பாடு எதிர்கால சந்ததியின் கல்வி, பொருளாதார மேம்பாடு உட்பட்ட சகல விடயங்களிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

எனவே, இவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக அரசு செயற்பட்டு அதிகார பலம் பொருந்திய இடைக்கால நிர்வாகசபை ஒன்றை புலிகளுக்கு வழங்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது. (த-43)

# அல்லைப்பிட்டிக் கிராமத்தில் மலேரியா நோய் பரவல்

(சுதுமலை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அல்லைப்பிட்டிக் கிராமத்தில் செப்ரெம்பர்-ஒக்டோபர் மாத காலப்பகுதியில் 14ற்கும் அதிகமான மலேரியா நோயாளர்கள் இனம் காணப்பட்டதாக வேலணைப்பகுதிப் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

கடந்த 2 வருடகாலமாக யாழ். மாவட்டத்தில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்த போதிலும், கடந்த 9 மாத காலப் பகுதிக்குள் நோய்த் தாக்கம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

ஆயினும், அல்லைப்பிட்டியில் திடிரென மலேரியா நோய் பரவியிருப்பதால் இந் நோயைப் பரவாது கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும்.

இந்த வகையில், இப் பகுதியில் உள்ள பல வீடுகளுக்கு மலத்தியோன் விசிறப்பட்டுள்ளதுடன், நீர் தேங்கும் இடங்களும் துப்புரவு செயயப்பட்டுள்ளன.

அத்துடன், பொதுமக்களும் நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும் எனத்தெரிவித்துள்ளார்.

(பி-252)

ஓம்

## தினசரி தியானம்

### பெருக்கமும் சுருக்கமும்

எல்லாவகைப் பெருக்கமும் (வளர்ச்சியும்) வாழ்க்கை. சுருக்கம் அனைத்தும் இறப்பு. எல்லோரிடத்தும் அன்பு பெருக்கம் (வளர்ச்சி) சுயநலம் என்பது சுருக்கம். ஆகவே அன்புதான் வாழ்க்கையின் ஒரே விதி. எவனொருவன் அன்புடையவனாக இருக்கின்றானோ அவனே வாழ்கின்றான். சுயநலக்காரன் இறந்து விடுகின்றான். அன்பு பெருக்குகிறது. சுயநலம் சுருக்குகிறது.

சுவாமி சிவானந்தர்

# சங்கச் செயற்பாடுகளுடன் முரண்படும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் அங்கத்துவத்தை நீக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கச் செயற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படும் உறுப்பினர்களை சங்கத்தில் இருந்து நீக்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளைக்கூட்டம் கடந்த திங்களன்று ஆரியகுளம் உயர்கல்வி நிலையத்தில் இடம்பெற்ற போது அதில் பங்கேற்ற பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்புடன் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன், நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை பாடசாலைப் புறக்கணிப்பைத் தொடர்வதெனவும் திருமலை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிமனை முன் தொடரும் வடக்கு-கிழக்கு தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ)

## தொகை மதிப்பீட்டுப் பணி

(கல்வயல்)

இலைங்கைப் புள்ளிவிபரத் திணைக்களம் கைத்தொழில் வர்த்தகசேவை தொடர்பான தொகை மதிப்பீட்டுப் பணியை மேற்கொள்ளுவதற்கான சகல நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, இதன் முதல் நடவடிக்கையாக சகல பிரதேச செயலகங்களிலும் கிராம உத்தியோகத்தர்களுக்கான புள்ளிவிபரம் திரட்டல் பற்றிய பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-36)

# சதோசா விற்பனை நிலையத்தை தனியார் மயப்படுத்தத் தீர்மானம்

(கொழும்பு)

''சதோசா'' என்ற கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் நஷ்டத்தில் இயங்கி வருவதால், அதனை தனியார் மயப்படுத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அதன் தலைவர் லால் விக்கிரம துங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான நகல் சட்டமூலம் வரையப்பட்டு, பேக்நிறுவனம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் என்பனவற்றிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டமூலம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதும், மேற்படி நிலையம் தனியார் மயப் படுத்தப்படும்.

அதுவரை 'சதோசா' விற்பனை நிலையங்களுக்காக திறைசேரியிடம் இருந்தும், வங்கிக்கடன்களின் ஊடாகவும் அதனைத் தொடர்ந்து நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-60)

# அரசாங்க வீடுகளை உத்தியோகத்தருக்கு வழங்க அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் நிர்வாகத்தின் கீழுள்ள அரசாங்க வீடுகளை அரச உத்தியோகத்தர்களுக்கே வழங்கும் வகையான திட்டமொன்றை அரசு மேற்கொள்ளவுள்ளது.

அரச உத்தியோகத்தர்களுக்கான அரசாங்க வீடுகளில் அவர்களை குடியேற்றல், மீள ஒப்படைத்தல என்பனவற்றில் ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் காரணமாக அரசாங்கம் இந் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக அரசாங்க வீடுகளில் வசித்துவரும் உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும்போது அல்லது இடமாற்றம், மற்றும் பதவி விலகும் போது தங்களின் விருப்பத்துக்கு ஏற்ப வீடுகளை மற்றவர்களிடம் ஒப்படைப்பதால் பிரச்சினைகள் எழுகின்றன.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(தி-61)

# மின்சாரம் தாக்கியதில் சிறுவன் பரிதாப மரணம்

## அராலி மேற்கில் சம்பவம்

(பொன்னாலை)
மின்சாரம் தாக்கியதில் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந் துள்ளான்.

நேற்று அதிகாலை 6 மணியள வில் அராலி மேற்கு கொட்டைக் காட்டைச்சேர்ந்த பற்குணராஜா தவ ரஞ்சன்(வயது 13) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

பால் வாங்குவதற்கு அயல் வீடொன்றிற்குச் சென்றபோது வழி யில் தொங்கிக் கொண்டிருந்த மின் சார வயரொன்றைப் பிடித்தபோதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் நீதிபதி திருமதி இளங் கோவன் விசாரணைகளை மேற் கொண்ட பின் சடலத்தை மரண விசாரணைக்காக யாழ்.ஆஸ்பத்திரி யில் ஒப்படைக்குமாறு உத்தரவிட் டார். (ந்-49,89)

# யாழ்.குடாநாட்டு மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

(திருநெல்வேலி)
தேசிய கடற்றொழிலாளர் ஒருங்கி ணைப்பு ஒன்றியத்தின் பிரதிநிதி பிரான்சிஸ் பிரியங்கா நேற்று வட மாகாண கடற்றொழிலாளர் சங்கங் களின் சமாசத் தலைவர் எஸ்.தவ ரட்ணத்தைச் சந்தித்து குடாநாட்டு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகள் குறித்துக் கேட்டறிந் துள்ளார்.

சமாச அலுவலகத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் தென் பகுதி மற்றும் இந்திய மீனவர்கள் வடபகுதிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடிப்பதால் எதிர்நோக்கப்படும் இடையூறுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் நேற்றைய தினம் யாழ்.சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள இந்திய மீனவர்களைப் பார்வையிட்ட இவர்கள் அவர் களுக்கு உடுபுடைவைகளை வழங்கினார். (உ-43,4)

# மணல் அள்ள தொடர்ந்து தடை

(திருநெல்வேலி)
வடமராட்சி கிழக்கிற்கு மணல் அள்ளச் சென்றவர்கள் நேற்று 5வது நாளாகவும் அப்பகுதி மக் களால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

வடமராட்சி கிழக்கில் அத்தியா வசியமான அபிவிருத்திப் பணி களை துரிதமாக மேற்கொள்ளுதல், கடல் நீர் உட்புகுவதைத் தடுத்து நிறுத்த விரைந்து நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட கோரிக்கை களை முன்வைத்து இப்பகுதி மக் கள் மண் அள்ளவிடாது தடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.-(உ-43)

# தண்ணீரைப் பெறுவதில் நெருக்கடி இன்னும் சில தசாப்தங்களில் ஏற்படும்

## யாழ்.அரச அதிபர் பத்மநாதன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ்.குடாநாட்டில் நீர் வளம் குறித்த ஆய்வரங்கு நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பதமநாதன் தலைமையில் காலை 9 மணிமுதல் இடம்பெற்ற இவ் ஆய்வரங்கில் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம், வடமாகாண நீர்ப்பாசன திணைக்களங்களின் பிரதிப் பணிப் பாளர் ஏ.சி.வினோதராசா, யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உள் ளிட்ட துறைசார்ந்த அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

இதில் யாழ்ப்பாண நன்னீராக்கல் திட்டத்தில் ஒரு பகுதியான தொண் டமானாறு உவர் நீர்த் தடுப்பு அணைத்திட்டத்தின் தற்போதைய நிலைமையை மதிப்பிட்டு செய்து முன்மொழிவுகள் செய்யப்பட்டன.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கருத்துக் கூறுகையில்,

யாழ்.குடாநாட்டின் நீர்ப்பாசனத் துறை தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக் கப்படாமையால் இன்னும் ஒருசில தசாப்தங்களில் நன்னீரைப் பெறு வதில் நெருக்கடியானதோர் சூழ்நிலை தோன்றும்.



இதனைத் தவிர்க்க, தற்போது பயன்பாட்டில் உள்ள பழமை வாய்ந்த நீரியல் வள மேம்பாட்டு முறைகளை கைவிட்டு நவீனத்து வத்தைப் புகுத்த வேண்டும்.

மக்கள் சமூகமும்,துறைசார்ந்த சமூகமும் நீர்வளத்தின் பெறுமதியை உணர்ந்து எதிர்காலத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது அவசி யம் என்றார். (உ-4)

# இயந்திரம் வெடித்து சிதறியதில் தந்தையும் மகளும் பரிதாப மரணம்

(மட்டக்களப்பு)
அம்பாறை நிந்தவூர்ப் பிரதே சத்தில் உள்ள நெல் ஆலை ஒன்றில் இயந்திரம் வெடித்து சிதறியதால் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த இருவர் உயிரிழந்து உள்ளதுடன் 4பேர் காய மடைந்து உள்ளனர்.

நேற்றுக் காலை 8.30 மணியள வில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் 5 வயது சிறுமியும் அவரது தந்தை யுமே உயிரிழந்துள்ளனர்.

மேற்படி ஆலைக்கு நெல் குற் றுவதற்காகச் சென்ற தந்தையும் மகளுமே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

காயமடைந்த அனைவரும் அம் பாறை மாவட்ட வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் (நி-66)

## விளையாட்டு நிபுணர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)
இலங்கையில் உள்ள மெய் வல்லுநர் பயிற்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக வெளிநாட்டைச் சேர்ந்த 3 விளை யாட்டு நிபுணர்கள் இவ்வார இறுதி யில் கொழும்பு வரவுள்ளனர்.

இலங்கை மெய்வல்லுநர் சம் மேளனத்தின் அழைப்பை ஏற்று இங்கு வரும் இம் மூன்று நிபுணர் களும் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜேர்மன் ஆகிய நாடுகளைச் சேர்ந் தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகி றது. (உ-60,10)

## ஒளிவீச்சு நாளை வெளிவரும்

(திருநெல்வேலி)
நிதர்சனம் நிறுவனத்தின் 15 ஆம் ஆண்டு நிறைவையொட்டி ஈழத் தமிழர்களின் வாழ்வாகவும் வரலாறாகவும் திகழும் ஒளிவீச்சு 100வது இதழ் நாளை 30ஆம் திகதி வெளியாகவுள்ளது. (ந-43)

## மீனவ சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
கனேடிய வெளிவிவகார அமைச் சின் செயலாளர் மற்றும் மீன்பிடித் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கிடை யிலான முக்கிய கலந்துரையாட லொன்று இன்று காலை 9 மணிக்கு கண்டி வீதியிலுள்ள வடமாகாண கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் ரி.தவரட்ணம் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலின் போது கடந்த 22ம் திகதி பருத்தித்துறை முனைப்பகுதியில் மீனவர் ஒருவர் தாக்கப்பட்டமை அதனைத் தொட ர்ந்து அப்பகுதியில் ஏற்பட்ட களே பரத்தின் பின் மீனவர்களுக்கு ஏற் பட்டுள்ள நெருக்கடி நிலை என் பன தொடர்பாக ஆராயப்படவுள் ளது.

இதேவேளை இக் கலந்துரை யாடலை நடாத்துவதற்காக நேற்று யாழ்ப்பாணம் வந்த கனேடிய வெளிவிவகார அமைச்சின் செய லாளர் அடங்கிய குழுவினர் கரை யோரப்பகுதிகளுக்குச் சென்று பார் வையிட்டதுடன் முக்கியஸ்தர் பலரையும் சந்தித்துப் பேசியுள் ளனர். (ந-43,4)

# வவுனியாவில் கோஷ்டி மோதல் ஏழு பேர் படுகாயமடைந்தனர்

(வவுனியா)
வவுனியாவில் இரண்டு கோஷ் டிகளுக்கிடையில் இடம் பெற்ற மோதல்களில் 7பேர் காயம டைந்துள்ளனர். வவுனியாவின் பிடாச்சூரி, மறவன்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இளைஞர் குழுக்களே மோதலில் ஈடுபட்டுள் ளனர்.

இச் சம்பவம் குறித்து விசாரணை யில் ஈடுபடச் சென்ற பொலிஸாரும் இக்குழுக்களின் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளனர். இதனைத் தொடர்ந்து அவ்விடத்துக்கு சென்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் இருதரப்பினருடனும் பேச்சுக்களில் ஈடுபட்டு பிரச்சி னையை சுமுகநிலைக்கு கொண்டு வந்துள்ளனர்.

இக் குழுக்களின் தாக்குதல் களில் விற்பனை நிலையங்கள் விவசாயச் செய்கைகள் என்பனவும் சேதமாக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு ஆரம்பமான இம் மோதல் நேற்று முற்பகல் 10மணிவரை இடம் பெற்றுள்ளது. இச்சம்பவங்களில் காயமடைந்தோர் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். (ந-5)

# இந்திய மீனவர்கள் 15 பேர் நேற்று விடுதலையாகினர்

(யாழ்ப்பாணம்)
யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர் 15 பேர் நேற்று விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்துக் கொண் டிருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட் டிருந்த 48 மீனவர்களில் 15 பேரே நேற்று விடுதலை செய்யப்பட்டவர் களாவர். நேற்று முன்தினமும் இரு மீனவர்கள் விடுதலை செய்யப்பட் டிருந்தனர்.

இதேவேளை ஏனைய மீனவர் கள் தொடர்பாக யாழ். மேன்முறை யீட்டு நீதிமன்றில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

# தப்பி ஓடிய இராணுவத்தினர் பதவிவிலகும் காலக்கெடு முடிவு

(கொழும்பு)
இராணுவத்தை விட்டு தப்பி ஓடி மூன்று வருடங்கள் கடந்த இரா ணுவ வீரர்களுக்கு உத்தியோக பூர்வமாக பதவி விலகுவதற்கு வழங்கப்பட்டிருந்த காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

கடந்த சில தினங்களாக கம்பஹா மாவட்ட செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்ட நடமாடும் முகாமில் விலகுவதற்கான விண் ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட் டன.

இதனையடுத்து இராணுவத் தில் இருந்து தப்பி ஓடிய 1939 இராணுவ வீரர்கள் பதவி விலகுவ தற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்ததாக தெரிவிக்கப்படுகி றது. இவர்களில் 637பேருக்கு உத்தியோக பூர்வமாக பதவிவில கியதற்கான கடிதங்கள் வழங்கப் பட்டதாக இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உரிய கடிதங்கள் மற்றும் ஆவ ணங்கள் சமர்ப்பிக்கத்தவறியதால் சிலருக்கு பதவி விலகியதற்கான கடிதங்கள் வழங்கப்படவில்லை என இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வ)


**புன்னாலைக்கட்டுவன் வடக்கு துர்க்காதேவி**

(குளத்தடி நாச்சிமார்)

கட்டுக்குள கந்தசுவாமி ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி

**விஞ்ஞாபனம்**

**இன்று 29.10.2003 புதன்கிழமை காலை 8 மணிக்கு அம்பிகைக்கும் முருகப் பெருமானுக்கும் 1008 சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் மகேஸ்வர பூசையும் இடம் பெறும். மாலை 5 மணிக்கு அம்பிகையும், முருகப் பெருமானும் அழகிய பூந்தண்டிகையில் வீதியுலா வரும் காட்சி இடம் பெறும்.**

**அத்துடன் மேளக் கச்சேரி, பட்டிமன்றம், வில்லுப்பாட்டு மற்றும் பல கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.**

இங்ஙனம்.

**ஆலய ஆதீன குரு**

(7717)


# திட்டவரைபை கையளித்த...

இலங்கைத் தொழிலாளர் காங்கி ரசின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தலை மையிலான குழுவினர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேசிய பின்னர் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே தமிழ்ச் செல்வன் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கடந்த இரண்டு மூன்று நாட் களுக்குமுன்னர் இடைக்கால நிர் வாக சபை தொடர்பாகச் செய்தி ஊடகங்களில் வெளியான தகவல் கள தொடர்பாக, அது பற்றிய எமது கருத்தை இப்போது சொல்வதற்கி ல்லை. ஊகங்கள் மட்டுமே இப்போது வெளியிடப்பட்டுள்ளது. அதன் உண் மைநிலையை சிறிது பொறுத்திருந்து பார்த்தால் புரிந்து கொள்ள முடி யும்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபை நாளை மறுதினம் நோர்வே அரசிடம் கைய ளிக்கவுள்ளோம். இதனையடுத்து அடுத்த நாள் சனிக்கிழமை காலை ஊடகவியலாளர்களைச் சந்தித்து அவர்களிடம் வெளியிடவுள்ளோம்.

இடைக்கால திட்டவரைபை நோர்வே மூலம் அரசிடம் கைய ளித்த பின்னர் முஸ்லிம் தரப்பின ரோடு கதைக்க வேண்டிய தேவை எமக்கிருக்கின்றது.அவர்களோடு பல விடயங்களைக் கதைக்கவுள் ளோம்.அவர்களது பிரதிநிதித்துவம் தொடர்பாகவும் எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற அரசியல் முன்னெடுப்புக்கள் சம் பந்தமாகவும் விரிவாக ஆராய வேண்டியிருப்பதால் அவர்களை மிக விரைவில் சந்திப்போம்.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் வாழுகின்ற அனைத்து சமூகங்க ளுக்கான பிரதிநிதித்துவம் அவர் களது அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் இருக்கு மென்று நாம் நம்புகின்றோம்.

தற்போது சர்ச்சைக்குள்ளாகி யுள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் செயற்பாடுகள் தொடர் பாக தற்போது நோர்வேயோடு நாம் தொடர்பு கொண்டு கருத்துக் களைப் பரிமாறி வருகின்றோம். இதனால் நாம் இப்போது அது பற்றிக் கருத்து வெளியிடுவது பொருத்தமாக இருக்கமாட்டாது. ஊடகங்களில் வெளிவரும் செய்தி களை வைத்துக் கொண்டு கருத் துச் சொல்வது தற்போதைய சமா தான முயற்சிகளுக்கு நெருக்கடியான சூழலை ஏற்படுத்திவிடுமென்ற கார ணத்தினால் இது தொடர்பாக எந்த விதமான கருத்தையும் தற்போது வெளியிட விரும்பவில்லை.

இடைக் கால நிர்வாகசபை தொடர்பாக இரு தரப்பும் நேரடியாகப் பேசி முடிவெடுக்க வேண்டியிருப்ப தால், பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் என்றே கருதுகின்றோம். ஆனால் அது சாத்தியப்படக் கூடிய தன்மை எங்கள் கையில் இல்லை. சமா தானப் பேச்சுவார்த்தைக்கு அனு சரணையாளர் என்ற தரப்பிற்கும், இலங்கை அரசு என்ற தரப்பிற்கும் அமையவே திகதிகளும், காலங் களும் நிர்ணயிக்கப்படலாம். எனி னும் எங்களைப் பொறுத்தவரை யில் நாம் எதற்கும் எப்பொழுதும் தயாராகவே இருக்கின்றோம் என்று அப் பேட்டியில் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (ம)

## முஸ்லிம்களின்...

ஹக்கீம், இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்வதற்கான ஆதரவை வழங்கவுள்ளதாகவும் அவர்கள் உறுதியளித்துள்ளனர் என்றும் தெரி வித்தார். (ம)

## புலிகளின் திட்ட...

குவதாக தெரிவித்தார்.

இப்பேச்சு வார்த்தையில் அமைச்சர் தொண்டமானுடன் பிரதி அமைச்சர் முத்துலிங்கம்,பாராளு மன்ற உறுப்பினர் ஆர்.யோகராசன், எம்.எஸ்.செல்லச்சாமி ஜெகதீஸ் வரன் ஆகியோரும் விடுதலைப் புலிகள் சார்பில் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கனும் கலந்து கொண்டனர். (வ)

## புலிகள்..

தயாராக இருக்க வேண்டும்.

குறிப்பாக முஸ்லிம் மக்களின் விடயத்தில் இருதரப்பும் கவனம் செலுத்த வேண்டும். இனப்பிரச் சினைக்கான தீர்வு ஓர் கூட்டு நடவ டிக்கையாகும். ஓர் அறைக்குள் இருந்து ஒரு சிலரால் அதைத் தீர் மானிக்க முடியாது.

தீர்வுத்திட்டங்களைத் தயாரித்த வர்கள் எவ்வளவுதான் நிபுணத்து வம் உடையவர்களாக இருந்தா லும் தயாரிக்கப்பட்ட யோசனைகள் மக்கள முன்வைக்கப்பட்டு மக்களால ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென் றும் பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவித்தார். (ந)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.